
# திருக்கோயில்

மே 90 விலை ரூ. 3











மாமல்லபுரம் அருள்மிகு தலசயனப் பெருமாள் திருக்கோயில் இராஜகோபுரத் திருப்பணி கால்கோள்விழா 3.4.90 அன்று நடைபெற்றது. அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.பி. கந்தசாமி எம்.ஏ. அவர்கள் திருப்பணியைத் துவக்கி வைத்தார்கள். ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள். துணை ஆணையாளர் திரு. கு. சிதம்பரம் பி.ஏ., மற்றும் உதவி ஆணையாளர் ப.ராஜா பி.எஸ்.ஸி., பி.எல். உடன் உள்ளனர்.

முகப்பு:

அருள்மிகு மதுரை மீனாட்சி

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை : 32 | திருவள்ளுவர் ஆண்டு 2021 பிரமோதூத ஆண்டு வைகாசி மே 1990 விலை ரூ. 3-00 | மணி 5 |
|---|---|---|


## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்


சித்திரையாள் நந்த சிந்தனை
—மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்

அறநிலையத்துறை ஆற்றிட இருக்கும் அரும்பணிகள்
—அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கே. பி. கந்தசாமி

மழைபொழிவிக்கும் வள்ளல் திருப்பதிகங்கள்
—திருமிகு ஆர். சண்முக சிகாமணி ஐ. ஏ. எஸ்.

செந்தமிழ்ச் சிவஞானபோதம்
—புலவர் அமுதன்

அந்தகாசூரனை வதைத்த திருக்கோவலூர் வீரட்டானம்
—தி. இராசமாணிக்கம்.

முருகன் ஆறுபடைவீடுகள்—திருப்பரங்குன்றம்
—பாரதி தீர்த்ததாசன்

பக்தருள் சிறந்த அதிபத்தர்
—திருமதி உமா ராஜன்

சித்திர பாரதம்
—செவ்வேள்

கந்தவேள் கருணை
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்.

மதுரை மீனாட்சி
—புலவர் ச. சோமசுந்தரம்


கம்பரின் இராமாவதாரம்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

நூல் மதிப்புரை
—நிறைமதி.




# சித்திரையாள் தந்த சிந்தனை

## மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்



உள்ளன்பு கொண்ட தமிழ் மக்களுக்கும்
உயர் கவிதை படைக்க வந்த பெருமக்களுக்கும்
என்
உயிரினும் மேலான உடன் பிறப்புகட்கும்
வணக்கமும் வாழ்த்தும் குவிக்கின்றேன்.
புத்தாண்டு வாழ்த்துரைக்க வருக என்று
தொலைக்காட்சி நிலையத்தார் தூதுவிடுத்தார்.
இங்கிருக்கும் கவிஞர்களின் அரங்கிற்கு
நான் தலைவனாம்! வேடிக்கை; நல்ல
வேடிக்கை!
இலக்கணமெனும் தாய்ப்பால் அருந்தாமல்-
பசி
எடுத்தபோதெல்லாம் புதுக் கவிதைப்
புட்டிப்பால் குடித்திடும் குழந்தை நான்!
எனை அழைத்து கவியரங்கத் தலைமை ஏற்கச்
செய்துள்ளார்!
ஏன் என்று யோசித்துப் பார்த்தபோது-நான்
''வைகாசி!'' என் கவிதைக்கெனக் கேட்க
மாட்டேன்.
வைகாசி!
''வை-காசி'' என் கவிதைக்கெனக் கேட்க
மாட்டேன்.
அதனாலே
சித்திரைக்கு வாழ்த்துச் சொல்ல
அழைத்துள்ளார்கள்.
கவியரங்கில் பங்கு நீ பெற்றந்த சித்திரைப்
பெண்ணுக்கு
ஆசி கூறென்றார்!
புரட்டாசி கூற மாட்டேன் என்பதாலே;
''புரட்டு ஆசி'' கூற மாட்டேன் என்பதாலே
துணிந்தழைத்தார் போலும்!
நான் வரும்போது
மார்கழியாத் தாவணியுடன்
மார்-கழி!
மார் கழியாத் தாவணியுடன்
(காற்றாலோ, கையாலோ விலகாத
தாவணியுடன்)
மார் கழியாத் தாவணியுடன் ஆவணிப்
பெண்ணாள்;
மரபு வழிக் குடும்ப மங்கை; எனைப் பார்த்து
ஆ நீயா? என்று............(ஆனி)
ஆடித் தீர்த்தாள் தை தை என்ற
அனல் கொட்டும் விழிகாட்டி!
எதற்காக?
தை முதல் நாள் தான் தமிழ்ப் புத்தாண்டாம்;
---அதற்காக!



உண்மைதான் எனினும் அவள் உருகாமல்
இருப்பதற்கு நான் சொன்னேன்.
தமிழர்க்கு ஓராண்டில் இரு புத்தாண்டு
வருவதால்
இரட்டிப்பு மகிழ்ச்சி தானே என்று!
தளிர்ப் பெண்ணின் குளிர் முகத்தில் நிலவு
கண்டேன்!
தழுவிக் கொண்டேன்! திகைக்காதீர்! மேலும்
மற்றொருத்தியா என்று!
மாதம்தான்!
மாதுவல்ல!
புத்தாண்டு இவ்வாண்டு என்பதைவிடப்
புரட்சிக் கவிஞரின் நூற்றாண்டு என்பதிலே
பெரு மகிழ்ச்சி
புது மனிதன் அம்பேத்கார் அவதரித்து
புதை குழியில் கிடந்தோரை எல்லாம்
கை தூக்கி நடக்க விட்டு அவர் முகத்தில்
கதிரொளியைப் பரவ விட்ட
வரலாற்றை இந்த வண்ணமிகு திருநாளில்
வாழ்த்த வேண்டும்!
வளர்க்க வேண்டும் புதிய சிந்தனையை!
இந்தியத் திருநாட்டு அரசியல் சாசனத்தைச்
சிந்தனைக் கருவூலமாய்த் தந்தவர்க்கும்—
விந்தியம் போல் எழுந்து நின்று, மொழி வெறி
வீணர்களின் ஆதிக்கம் தடுத்து நின்றவர்க்கும்;
ஆம்; அடலேறு மனிதர் அம்பேத்காருக்கும்
அரிமா நெஞ்சப் பாரதி தாசருக்கும்
நூற்றாண்டு கொண்டாடும் இந்த ஆண்டில்
தோற்றோடிப் போகட்டும்
தொல்லை தரும் தீய சக்தி!

''சாதியிலே மதங்களிலே சாத்திரச் சகதியிலே
சாயாதீர் மனிதர்காள்'' என்ற சான்றோன்
வடலூர் வள்ளலார் வார்த்தைகளை
மதித்தோ மில்லை! அவருக்கு
வான் மறைக்கத் தோரணம் கட்டி
விழா மட்டும் எடுக்கின்றோம்; வெட்கமில்லை.
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கு மென்ற
பெருமகனாம் வள்ளுவர்க்குச்
சிறப்பு மட்டும் செய்கின்றோம்; ஆனால் அவர்
செப்பியதைச் செயல்படுத்த மறுத்து விட்டுப்
பெற்றெடுத்த பெண்ணுக்கும் பிள்ளைகட்கும்
உற்றார் உறவுக்குள் சம்பந்தம் தேடுகின்றோம்
-இந்த
ஊருக்கு உபதேசிகளால் கொண்ட கொள்கைக்கு
என்ன லாபம்?
உள்ளதைச் சொன்னால் உடலெரித்து
வருவதேன் கோபம்?
சிந்தனையில் விளைந்த செல்வம் சீர்திருத்தக்
கொள்கையெனில்
செயல்படாது அதனை விடுத்தல்
பெருந்துரோகம்!
துரோகத்தைப் போற்றித் துதிபாடித்
தொழுவதற்கு
எட்டப்பன் காலத்திற்கு முன்பிருந்தே பழகி
விட்ட
தமிழர்களும் இருக்கின்றார் தமிழ்நாட்டில்!
காரி
உமிழ்கின்றான் கட்டபொம்மன் என்றாலும்;
கவலையில்லை அந்தக் காரியவாதிகளாம்
பகைவர்

கால் பிடித்து வாழ்கின்ற மேதைகட்கு!
கொள்கை என்றும் கோட்பாடென்றும்
குரல்வளையை நெறித்தாலும் விடேன் என்றும்
குன்றேறி முழக்கி விட்டு-அதில்
ஒன்றேனும் நிறைவேறச் செயல்படாமல்;
மன்றேறி மாவீரன் போல் நிமிர்ந்து நின்று
மக்கள் முன்னே நடிப்பதனால் என்ன பயன்?
வாக்கும் செயலும் ஒன்றாக இருந்தால் தான்
—நாட்டில்
பூக்கும் அரசுக் காய்த்துக் குலுங்கும்!
சொன்னதைச் செய்வதற்கும்
செய்வதைச் சொல்வதற்கும்
ஓர் அரசு உமதரசு நடப்பதாலே
சீர் பெருக உழைத்திடுவோம் என்றும்.
தேர்க்காலின் அச்சாணி போன்ற
ஏர்ப்பின்னால் தேசம் இருத்தலே
பொருத்தமென்றும்
எழில்மிகு நகர்கள், ஊர்கள், ஏக்கமிலாச்
சமுதாயம்
தொழில் வளம் பெருகினால் தோன்றிடு
மென்றும்;
தீயநோய் பல களைந்து தெளிந்த நல்வாழ்வு
காண
தூய நோக்குடன் திட்டங்கள் தேவை என்றும்;
பாயும் புலியாய் அரசினர் இருந்தால்
பதுக்கல் எலிகள் அழுந்துவர் என்றும்,
இடுப்பொடிந்து கல்வியிலும்வேலை
வாய்ப்பினிலும்
துடுப்பில்லாப் படகுகளாய்த் தத்தளித்தோர்
வாழ்வு;
இட ஒதுக்கீட்டுப் புரட்சிகர மாற்றங்களால்
இனி வரும் காலத்தில் வளம் பெற்றுத்
திகழுமென்றும்;
எட்டாவதுவரை படித்த ஏழை வீட்டு
இளஞ்சிட்டு
எட்டாப் பழமடியோ இல்வாழ்க்கை என
ஏங்கியதை மாற்றி விட்டு
தட்டாமல் அவள் கழுத்தில் தாலியேற
வைப்பதற்கு
தந்திடும் ஐயாயிரம் தவமின்றிப் பெற்ற
வரமென்றும்
குடும்பத் தலைவரை இழந்து குமுறிக் கதறி
இடும்பைகூர் வறுமையினால் வாடுவோர்க்கு-
அரசு
தரும் தொகை தான் அவர்தம் கண்ணீர்
துடைக்கும்
அரும் தொகையாய் அமையும் என்றும்;
முட்டையுடன் குழந்தைகட்குச் சத்துணவு-
வெறும்
பெட்டைகளாய்ப் பெண்களை எண்ணாதீர்
என்று,
முப்பது விழுக்காடு முதல்கட்டச் சலுகை
என்றும்
முடிவாக ஆணுக்கும் பெண்ணுக்கும்
''அர்த்த நாரீஸ்வர'' உரிமை கிட்டு
மென்றும்;
(அதாவது பாதி பாதி-50 சதவீதம்)
பெண்ணுரிமை வழங்கினால் தான்
பேசுந்திருநாட்டு
மண்ணுரிமை நிலைக்குமென்றுரைத்து
பெற்றோர் உடைமையில் பாதி
பெண்மகவுக்குமெனப்
பெருமைமிகு சம உரிமைச் சட்டமென்றும்;
கருவுற்ற ஏழைப் பெண்கள், கலப்பு மணத்
தம்பதியர்
கைம்பெண்ணை மணம் புரிந்தோர்,
ஊனமுற்றோர்
தொழுநோய் இரவலர்
பொருளற்றுத் திருவற்றுத் திகைத்திடாமல்-
நாம்
புரவலராய் நின்றுஅவரைப்
போற்றுவோமென்றும்;
ஆண்டுக்கு மூன்று பண்டிகைகளில்
ஐந்து கிலோ அரிசி இலவசமென்றும்;
ஆதி திராவிடர் பழங்குடியினர்க்கு மட்டுமின்றி
அடி மட்டத்தில் உழல்கின்ற மிகப் பிற்பட்டோர்
-சீர்மரபினர்
குடியிருக்க வீட்டு மனை இலவசமாய்க்
கொடுத்திடுவோம் கையகப்படுத்தி யென்றும்;
குடிநீர் இல்லாச் சிற்றூர் இல்லை எனும்
புதுநிலைக் காணப் பணிபுரிவோம் என்றும்;
வானமே கூரையாய் பூமியே பாயாய்
வாழ்ந்தது போதும்
மீனவர் மற்றும் ஆதி திராவிடர் பழங்குடியினர்
வசித்திட
திடமிகு வீடுகள் தினமும் கட்டிடும்
திட்டத்தை மீண்டும் தொடருவோம் என்றும்;
நாடு காத்தும் மொழி காத்தும் நலிவுற்ற
—தியாகிகட்கு
நலநிதி மற்றும் வசதி வாய்ப்புகள் தருவது
என்றும்;
கல்விச் சாலைகள் சென்றிடு மாணவர்க்குப்
பேருந்தில்
கட்டணச் சலுகை வாரி வழங்குவதென்றும்;
அரசு ஊழியர், ஆலைத் தொழிலாளர், ஆசிரியர்
நெசவாளர்
அனைத்துப் பாட்டாளி மக்கள் உழவர்கள்
என்றே
ஆவி நிகர்த்தவர் நியாயக் கோரிக்கை ஏற்று
தாவித் துயர்களையத் தயாராயிருப்போம்
என்றும்;
வெல்லம் போல் இனிக்கின்ற சொல்லால் அல்ல,
சொல்லுக்குச் செயல் வடிவம் கொடுக்கின்ற
-ஆட்சி இது!

அதனால் தான்;
சிந்தனை வளர்ப்போம் செயல் படுவோம்
சீர்பெருக்கிச் சீலம் காத்திடுவோம் என்றும்;
உள்ளத்தில் உண்மை ஒளி கொண்டு
உருக்கைப் போல் உறுதி மிகக் கொண்டு
உரிமைகளைப் பெற்றிடுவோம் என்றும்;
உலகத்தைக் கற்றிடுவோம் என்றும்;
கவிதைக்குச் சுதந்திரம் அளிக்கும்
கவிஞன் நான் தலைப்புகள் தந்தேன்.

(கவியரங்கின் முடிவுரையில் ''மந்த மாருதத் தாலாட்டில் உறங்குவதற்கு மாட மாளிகை கட்டி வாழ்கின்ற பெரியீர்! மாணிக்கப் பொரியலும் மரகதக்கூட்டுமாய் இலையிலிட்டு உண்கின்றீர்'' எனவினவும் ''சங்கத்தமிழ்'' கவிதையாரம் ஒன்றையும் சூட்டினார். அதன் பிறகு முத்தாய்ப்பாக டாக்டர் கலைஞர் அவர்கள் பாடி முடித்த கவிதை மலர் பின் வருமாறு:)

பதவி யொரு முள் மாலை! இலக்கியப்
பணி எனக்கு முல்லைச் சரம்!

பதவி யொரு நெடும் பள்ளம்! பொதுப்
பணி எனக்குப் பொதிகைக் குன்றம்!
மானமா? மகுடமா? எனக் கேட்டால்
மானத்தை மட்டுமே மதிக்கின்ற மனிதன்நான்!
கிரீடமா? தலையா எனக் கேட்கும்போது
கிரீடமே போதுமென இளிக்கின்ற
—கிறுக்கனல்ல நான்!


அதனால் தான்
உறவுக்குக் கை கொடுப்போம்
உரிமைக்குக் குரல் கொடுப்போம்என்றுரைத்து
பதவித்
துறவுக்கும் தயாராகப் பத்தாண்டுக்குமேல்
கழித்தவன் நான்!
பணி புரியும் வாய்ப்புத்தான் பதவி!
பதவி, பவிசு, படாடோபம், எல்லாமே; ஊதிய
பலூனைப் போல் வெடித்து விடும்.
பண்பார்ந்த தொண்டொன்றே
வானைப்போல் நிலைத்து நிற்கும்!
இதையறியாச் சில பேர்கள்
பதவி யொன்றே பிறவி யெடுத்த பயன் என்று
கரையிலிட்ட மீனைப் போல் துடிக்கின்றார்!
அவர்களுக்கும் சேர்த்துப் புத்தாண்டு
வாழ்த்துக் கூறி

அறிஞர்க்கும், கவிஞர்க்கும்
அனைத்துப் பிரிவுத் தோழர்க்கும்
நன்றி கூறி அமைகின்றேன்!
நல்வணக்கம் ஏற்றிடுக!''

(தமிழ்ப் புத்தாண்டு தினத்தை யொட்டி தொலைக்காட்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய சிந்தனைகளைத் தாங்கிவரும் இத்தலைமைக் கவிதை நன்றியுடன் எடுத்து வெளியிடப் பெற்றுள்ளது.)

# அறநிலையத்துறை ஆற்றிட இருக்கும் அரும்பணிகள்!

**அறநிலையத்துறை அமைச்சர்**
**மாண்புமிகு கே.பி. கந்தசாமி, எம்.ஏ.**



திருக்கோயில்களின் வருவாய் இந்தஆண்டு கணிசமாகப் பெருகி உள்ளது. வருவாயில் ஒரு பகுதி சமுதாயப் பணிக்கு செலவிடப்பட வேண்டும். கல்லூரிகள் பள்ளிகள் பல கோவில்கள் மூலம் நடக்கின்றன. மேலும் இது அதிகமாக வேண்டும் என விரும்புகிறோம்.

பெரியார் மாவட்டத்தில் உள்ள பண்ணாரி அம்மன் கோவில் சார்பாக மகளிர் கல்லூரி தொடங்க விருப்பம் தெரிவித்து உள்ளனர்; கல்வித்துறை ஒத்துழைத்தால், மானியம் கொடுத்தால் 2 அல்லது 3 ஆண்டில் 10 கல்லூரிகளைத் தொடங்கி நடத்த இந்தத் துறை முன்வரும்.

ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் நிலை பெற்ற பதிகங்களாலும் பாசுரங்களாலும் போற்றப்பட்ட திருக்கோவில்கள் தமிழ் நாட்டில் பல உள்ளன. எனவே இத்தகைய, திருச்கோவில்களுக்கு திருப்பணி செய்வதுடன் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த திருச்கோவில்களை சரியான முறையில் செப்பனிடுதலும் அவசியமெனக் கருதப்படுகிறது.

1989-90-ஆம் ஆண்டின்போது திருக்கோவில்களின் திருப்பணிக்காக ரூ. 45 இலட்சங்கள் அரசு மானியமாக வழங்கப்பட்டு உள்ளது. அதே போன்று ஆணையரின் பொது நலநிதியில் இருந்து ரூ. 5.30 இலட்சங்கள் திருப்பணி மற்றும் இதர பணிகளுச்காக வழங்கப்பட்டுள்ளன.

அரசு மானியம் தவிர 'ஐந்துகோடி திருக்கோவில் பராமரிப்பு நிதி' மூலம் பெறும் வட்டித் தொகையில் இருந்தும் ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும் நிலைத்த புகழுடைய பதிகங்கள் பாசுரங்களால் போற்றப்பட்ட தொன்மையான திருக்கோவில்களின் திருப்பணி – செப்பனிடுதல் மற்றும் கட்டிட பணிகளை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

திருக்கோயில்களின் வருவாயைப் பெருக்கவும் அவைகளுக்குச் சொந்தமான நகர்ப்புறச் சொத்துக்களை சிறந்தமுறையில் பயன்படுத்தவும் திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடங்களில் அங்காடி வளாகம், குடியிருப்புமனைகள் மற்றும் திருமண மண்டபங்கள் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்களுக்கான செலவுகள், சம்பந்தப்பட்ட திருக்கோவில்கள் நிதியில் இருந்தும், இதர திருக்கோவில்களில் இருந்தும், வங்கிகளில் இருந்து பெறும் கடன்களில் இருந்தும் செய்யப்படும்.

# மழை பொழிவிக்கும் வள்ளல் திருப்பதிகங்கள்


## ஆர். சண்முக சிகாமணி ஐ.ஏ.எஸ்

அரசுச்செயலாளர், அறநிலையத் துறை.


இன்று சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, மாசு கட்டுப்பாடு என்ற கேடயங்களைப் பருவமழை பெய்ய நாடுகிறோம். உயிர்கட்கு மழையின்மை தோற்றுவிக்கும் ஆற்றொணா வாட்டத்தைப் போக்க அபிடேகப் பிரியனாம் கங்கை முடிமேல் கொண்ட ஈசனார் திருமுடிமீது இடையறாதொழுகும் புனல் முழுக்காகிய தாரா அபிடேகம் செய்கிறோம். நாடோறும் வழிபாட்டில் ''வீழ்க தண் புனல்'' எனவும் வேண்டுகிறோம்.

எனறும் ''வான் முகில் வழாது பெய்ய'' தமிழிசை முழங்கிய திருஞானசம்பந்தர் மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் 1. திருக்கழுமலம், 2. திருவையாறு, 3. திருமுதுகுன்றம், 4 திருவீழிமிழலை, 5. திருக்கச்சியேகம்பம், 6 திருப்பறியலூர் வீரட்டம் மற்றும், 7. திருப்பராய்த்துறை ஆகிய திருத்தலங்களில் உறை பிறை சூடும் அண்ணலை கல்நெஞ்சையும் கரைக்கும் வகையில் ஏழு திருப்பதிகங்களால் பரவி உள்ளார். அவற்றை நாம் மறக்கலாமா? குறிப்பாக இந்தக் கடும் கோடையில் மழையமிழ்து வேண்டி ''அருண தள பாத பத்ம, மது நிதமுமே துதிக்க அரிய தமிழ்'' தானளித்த அவன் சரண கமலாலயத்தை இவ்வரியபதிகங்களால் ஓதுவாமூர்த்திகள் மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் நாளும் இசைப்பராயின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர்மல்கும் இத்திருப்பதிகங்கள், அவன் இன்னருளால் மழைபொழிவிக்கும் என்பது திண்ணம். அங்ஙனம் நாமும் இத்திருபதிகங்களை இசைக்க திருவருள் துணைபுரிவதாகுக.

திருஞான சம்பந்தர் மேகராகக் குறிஞ்சிப்பண்ணில் பாடியருளியுள்ள திருப்பதிகங்கள் பின்வருமாறு:

### 1. திருக்கழுமலம்

சேவுயருந் திண்கொடியான் றிருவடியே
  சரணென்று சிறந்தவன்பால்
நாவியலு மங்கையொடு நான்முகன்றான்
  வழிபட்ட நலங்கொள்கோயில்
வாவிதொறும் வண்கமல முகங்காட்டச்
  செங்குமுதம் வாய்கள்காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
  கண்காட்டுங் கழுமலமே.



பெருந்தடங்கண் செந்துவர்வாய்ப் பீடுடைய
  மலைச்செல்வி பிரியாமேனி
அருந்தகைய சுண்ணவெண்ணீ றலங்கரித்தான்
  அமரர்தொழ வமருங்கோயில்
தருந்தடக்கை முத்தழலோர் மனைகடொறும்
  இறைவனது தன்மைபாடிக்
கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப்
  பாட்டயருங் கழுமலமே. 2

அலங்கன்மலி வானவருந் தானவரு
  மலைகடலைக் கடையப்பூதங்
கலங்கிவெழு கடுவிடமுண் டிருண்டமணி
  கண்டத்தோன் கருதுங்கோயில்
விலங்கலமர் புயன்மறந்து மீன்சனிபுக்
  கூன்சலிக்குங் காலந்தானுங்
கலங்கலிலா மனப்பெருவண் கையுடைய
  மெய்யர்வாழ் கழுமலமே. 3



பாரிதனை நலிந்தமரா பயமெய்தச்
சயமெய்தும் பரிசு வெம்மைப்
பாரிசையும் புரமூன்றும் பொன்றவொரு
சிலைவளைத்தோன் பொருந்துங்கோயில
வாரிசைமென் முலைமடவார் மாளிகையின்
சூளிகைமேன் மகப்பாராட்டக்
காரிசையும் விசும்பியங்குங் கணங்கேட்டு
மகிழ்வெய்துங் கழுமலமே

ஊர்கின்ற வரவமொளி விடுதிங்க
ளொடுவன்னி மத்தமன்னும்
நீர்நின்ற கங்கைநகு வெண்டலைசேர்
செஞ்சடையா னிகழுங்கோயில்
ஏர்தங்கி மலர்நிலவி யிசைவெள்ளி
மலையென்ன நிலவிநின்ற
கார்வண்டின் கணங்களாற் கவின்பெருகு
சுதைமாடக் கழுமலமே. 5

தருஞ்சரதந் தந்தருளென் றடிநினைந்து
தழலணைந்து தவங்கள்செய்த
பெருஞ்சதுரர் பெயலர்க்கும் பீடார்தோ
ழமையளித்த பெருமான்கோயில்
அரிந்தவய லரவிந்த மதுவுகுப்ப
வதுகுடித்துக் களித்துவாளை
கருஞ்சகட மிளகவளர் கரும்பிரிய
வகம்பாயுங் கழுமலமே. 6

புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய்
நிலனைந்தாய்க் கரணநான்காய்
அவையவைசேர் பயனுருவா யல்லவுரு
வாய்நின்றா னமருங்கோயில்
தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு
கொம்புதைப்பக் கொக்கின்காய்கள்
கவணெறிகற் போற்சுனையிற் கரைசேரப்
புள்ளிரியுங் கழுமலமே. 7

அடல்வந்த வானவரை யழித்துலகு
தெழித்துழலு மரக்கர்கோமான்
மிடல்வந்த இருபதுதோ ணெரியவிரற்
பணிகொண்டோன் மேவுங்கோயில்
நடவந்த வுழவரிது நடவொணா
வகைபரலாய்த் தென்றதுன்று
கடல்வந்த சங்கீன்ற முத்துவயற்
கரைகுவிக்குங் கழுமலமே.
பூமகள்தன் கோனயனும் புள்ளினொடு
கேழலுரு வாகிப்புக்கிட்
டாமளவுஞ் சென்றுமுடி யடிகாணா
வகைநின்றா னமருங்கோயில்
பாமருவுங் கலைப்புலவோர் பன்மலர்கள்
கொண்டணிந்து பரிசினாலே
காமனைகள் பூரித்துக் களிகூர்ந்து
நின்றேத்துங் கழுமலமே. 9

குணமின்றிப் புத்தர்களும் பொய்த்தவத்தை
மெய்த்தவமாய் நின்றுகையில்
உணன்மருவுஞ் சமணர்களு முணராத
வகைநின்றா னுறையுங்கோயில்
மணமருவும் வதுவையொலிவிழவினொலி
யிவையிசைய மண்மேற்றேவர்
கணமருவு மறையினொலி கீழ்ப்படுக்க
மேற்படுக்குங் கழுமலமே. 10

கற்றவர்கள் பணிந்தேத்துங் கழுமலத்துள்
ஈசன்றன் கழன்மேனல்லோர்
நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்
பந்தன்றா னயந்துசொன்ன
சொற்றுணையோ ரைந்தினொடைந்
திவைவல்லார்
தூமலராள் துணைவராகி
முற்றுலக மதுவாண்டு முக்கணான்
அடிசேர முயல்கின்றாரே. 11

## 2. திருவையாறு

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம் மேலுந்தி
அலமந்தபோதாக வஞ்சேலன்
றருள் செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே. 1

விடலேறு படநாக மரைக்கசைத்து
வெற்பரையன் பாவையோடும்
அடலேறொன் றதுவேறி யஞ்சொலீர்
பலியென்னு மடிகள்கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியி
னுடன் வந்து கங்குல்வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தங்
கீன்றலைக்குந் திருவையாறே.

கங்காளர் கயிலாய மலையாளர்
கானப்பே ராளர்மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலுங்கோயில்
கொங்காலப் பொழிலுழைந்து கூர்வாயா
லிறகுலர்த்திக் கூதனீங்கிச்
செங்கானல் வெண்குருகு பைங்கானல்
இரைதேருந் திருவையாறே.

ஊன்பாயு முடைகலைகொண் டுருரின்
பலிகுழல்வா ருமையாள்பங்கர்
தான்பாயும் விடையேறுஞ் சங்கரனார்
தழலுருவர் தங்குங்கோயில் 4
மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய் மடுக்கடோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல
மொட்டலருந் திருவையாறே.

நீரோடு கூவிளமு நிலாமதியும்
வெள்ளெருக்கு நிறைந்தகொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த
தத்துவனார் தங்குங்கோயில்
காரோடி விசும்பளந்து கடிநாறும்
பொழிலணைந்த கமழ்தார்வீதித்
தேரோடு மரங்கேறிச் சேயிழையார்
நடம்பயிலுந் திருவையாறே 5

---

# மழையே அமிழ்தம்

**வானின் றுலகம் வழங்கி வருதலான்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று**

**—திருவள்ளுவர்**

---

வேந்தாகி விண்ணவர்க்கு மண்ணவர்க்கு
நெறிகாட்டும் விகிர்தனாகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த
புண்ணியனார் நண்ணுங்கோயில்
காந்தார மிசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார்வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே. 6

நின்றுலா நெடுவி சும்பி வெருக்கிவரு
புரமூன்று நீள்வாயம்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி
மலையாளி சேருங்கோயில்
குன்றெலாங் குயில் கூவக்கொழும்பிரச
மலர்பாய்ந்து வாசமல்கு
தென்றலா ரடிவருடச் செழுங்கரும்பு
கண்வளருந் திருவையாறே.


அஞ்சாதே கயிலாய மலையெடுத்த
வரக்கர்கோன் தலைகள்பத்தும்
மஞ்சாடு தோணெரிய வடர்த்தவனுக்
கருள்புரிந்த மைந்தர்கோயில்
இஞ்சாய விளந்தெங்கின் பழம்வீழ
விளமேதி யிரிந்தங்கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல
வயல்படியுந் திருவையாறே. 8

மேலோடி விசும்பணவி வியனிலத்தை
மிகவகழ்ந்து மிக்குநாடும்
மாலோடு நான்முகனு மறியாத
வகைநின்றான் மன்னுங்கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தினின்றும்
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே. 9

குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு
சாக்கியருங் குணமொன்றில்லா
மிண்டாடு மிண்டருரை கேளாதே
யாளாமின் மேனித்தொண்டீர்
எண்டோளர் முக்கண்ண ரேம்மீசர்
இறைவரினி தமருங்கோயில்
செண்டாடு புனற்பொன்னிச் செழுமணிகள்
வந்தலைக்குந் திருவையாறே. 10

அன்னமலி பொழில்சூ ழையாற்றெம்
பெருமானை யந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான
சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையா லிவைபத்து மிசையுங்கால
ஈசனடி யேத்துவார்கள்
தன்னிசையோ டமருலகிற் றவநெறிசென்
றெய்துவார் தாழாதன்றே. 11

**(திருமுதுகுன்றம், திருவீழிமிழலை, திருக்கச்சியேகம்பம் திருப்பறியலூர் வீரட்டம் மற்றும் திருப்பராய்த்துறை திருப்பதிகங்களை அடுத்த இதழில் படித்து மகிழலாம்.)**



# செந்தமிழ்ச் சிவஞான போதம்

புலவர் அமுதன்

**மெய்கண்டார் வரலாறு**

தெய்வ மணங்கமழும் தமிழ்த்திரு நாட்டில் திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) என்ற தலத்துக்கு தென் மேற்கே பெண்ணாகடம் என்ற மூதூர் உள்ளது. அவ்வூரில் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அச்சுத களப்பாளர் என்ற வேளாண்குடிப் பெருமகனார் வாழ்ந்து வந்தார். நெடுங்காலமாக மகப்பேறின்றி வருந்திய அவர் திருவெண்காடு சென்று முக்குள நீராடி முதல்வனை வழிபட்டு வந்தார். அந்தச் சிவபுண்ணியத்தின் பயனாகத் தோன்றியருளியவர் மெய்கண்டார். திருவெண்காட்டு இறைவன் திருவருளால் தோன்றியமையால் மெய்கண்டாருக்குச் சுவேதவனன் என்பது பிள்ளைப் பெயராக விளங்கியது.

**மெய்கண்டார் திருமரபு**

மெய்கண்டார் திருவெண்ணெய் நல்லூரில் தாய்மாமன் இல்லத்தில் வளர்ந்து வந்தார். அவர் முற்பிறவிகளில் சரியை கிரியை யோகங்களைச் செய்தவராதலின் திருஞான சம்பந்தரைப் போல குழந்தைப் பருவத்திலேயே மெய்யுணர்வு நலம் சிறந்து விளங்கினார். அகச் சந்தான குரவருள் நாலாமவராகிய பரஞ்சோதிமாமுனிவர் மண்ணகத்தே வந்து மெய்கண்டாருக்கு [illegible] தேசம் செய்தனர் எனவும், தம் [illegible] பெயராகிய சத்திய ஞான தரிசினிகள் [illegible] ரையே மெய் கண்டார்க்குச் சூட்டினா[illegible] கூறுவர்.

மெய்கண்டாரின் மாணவர்களில் குறி[illegible]டத் தக்கவர்கள் அருள் நந்திசிவனார், மனவாசகங்கடந்தார், சிற்றம்பலநாடிகள் ஆகியோர். மெய்கண்டார் திருமரபில் வழிவழியாகச் சைவத் தமிழ் நலம் வளர்த்து வரும் அருளாசிரியர்களே திருவாவடுதுறை, தருமபுரி ஆதீனங்களின் குரு முதல்வர்கள்.

**சிவஞான போதச் சிறப்பு**

மெய்கண்டார் என்ற பெயர் காரணப் பெயராகவும் விளங்குகின்றது. ''பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண்ட நாதன்'' என்று போற்றுகின்றார் தாயுமானவர். ஒன்றே பொருள் எனில் வேறென்றும், அன்றெனில் ஒன்றென்றும் மாறுபடுகின்ற சமய நூலறிஞரிடை முப்பொருள் உண்மையினை 216 சொற்களைக் கொண்ட 40 அடிகளால் மலைவு தீர எடுத்துரைத்தவர் மெய்கண்டார். சிவஞான போதத்தைப் போன்றதொரு நூல் நிலவுலகத்துள் எம்மொழிக் கண்ணும் இல்லை என்பார் மாபேராசிரியர் மறைமலை அடிகளார்.

சிவஞானபோதம் திருமுறைகளின் தெளிவாக விளங்குவது, வேதநூற் பொருளைத் தெரிவிக்கும் ஆகம நூல் மரபு தழுவி முப்பொருள் இயல்புகளைக் கூறுவது, முப்பொருள் உண்மைக்குக் காரணம், முப்பொருள்களின் இயல்பு, பாசத்தளை உதறிப் பதிப்பொருளைச் சென்றடையும் நெறி, பரம்பொருளைச் சென்றடைவதன் பயன் ஆகியவற்றை விளக்குவது, பாசஞானத்தாலும் பசு ஞானத்தாலும் உணரமுடியாத பரம்பொருளைச் சென்றடைவதற்கு வழிகாட்டும் சிவஞானத்தைப் போதிப்பதனால் சிவஞானபோதம் என்று சிறப்பிக்கப்படுகினறது.

சிவஞானபோத நூற்பாக்கள் பன்னிரண்டும் பொது உண்மை என்ற அதிகாரங்களாகவும், பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல் பயனியல் என்ற இயல்களாகவும் பொருளடைவு நோக்கிப் பிரிக்கப்பட்டுள்ளன. சிவஞான போதக் கருத்தினை விளக்கும் எண்பது வெண்பாக்களும் சிவஞான போதச் செழுமறையுள் அடங்கும்.

**சிவஞான போதப் பொருளடைவு**

1. அவன் அவள் அது என்று சுட்டிக்காட்டப்படுகின்ற ஆணும் பெண்ணும் ஒன்றும் பலவுமாகிய உலகத்துப் பொருள்கள் தோனறி நின்று மறைகின்ற இயல்புடையன. ஆதலின் இந்த உலகமும் ஒரு காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதே. இன்று பாதுகாக்கப்படும் நிலையில் உள்ளது. பின்னொரு காலத்தில் இவ்வுலகம் ஒடுங்கும். உயிர்களின் ஆணவ மல நீக்கத்தின் பொருட்டு மீண்டும் உளதாகும். அனைத்துப் பொருள்களும் ஒடுங்கிய பின்னரும் எப்பொருள் அழிவின்றி நிற்குமோ அதுவே உலகிற்கு முதற் பொருள் என்று அளவை நூல் அறிந்தோர் கூறுவர்.

அவள் அவள் அதுஎனும் அவைமூ
வினைமையின்
தோற்றிய திதியே; ஒடுங்கிமலத்து உளதாம்:
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

2. பரம்பொருள் உலக உயிர்களோடு அவையே ஆகியும், தானே ஆகியும், அவையே தானே ஆகி



யும் ஒன்றாய் வேறாய் உடனாய்க் கலந்து நிற்பது. உயிர்கள் இருவினை காரணமாக இறந்தும் பிறந்தும் போக்கு வரவு புரியும், பரம் பொருளோ போக்குவரவு புரிய வேண்டாதது. ஓடி ஆடிப் பணிபுரியும் பணியாளர்களை, இருந்தபடி இருந்து பணிகொள்ளும் தலைவரைப் போல் தன் ஆணையினால் உயிர்களைப் போக்கு வரவு புரியச் செய்து தான் நீக்கமின்றி நிற்பது.

அவையே தானே ஆய் இருவினையின்
போக்குவரவு புரிய, ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

3. வினைக்கீடாக உடம்பினை எடுத்துப் போக்கு வரவு புரியும் உயிர் என ஒன்று இல்லை என்பார் பலர். உயிர் இல்லை என்று சொல்வது, எது? அங்ஙனம் ஆராய்ந்து சொல்கின்ற அறிவினை உடைய ஒன்றே உயிர் ஆகுமே! உடம்பினை என் உடம்பு என்று உரிமை கொண்டாடுவது உயிர். ஐம்புலன்களையும் அறிவது உயிர். ஐம்புலன்களும் ஒடுங்கிய காலத்துக் கனவு நிகழ்ச்சிகளை அறிவது உயிர். உறங்கும்போது உடம்பு செயல்படாத காரணத்தால் உறங்காதபோது உடம்பினைத் தொழிற்படுத்துவது உயிர். உணர்த்த உணரும் அறிவுப் பொருள் உயிர். மாயை என்னும் நுண் பொருளால் ஆக்கப்பட்ட இயந்திரம் போன்ற உடம்பினை இயக்கிக் கொண்டிருப்பது உயிர்.

உளது இலது என்றலின், எனதுஉடல்
என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின், கண்படில்
உண்டிவினை இன்மையின், உணர்த்த
உணர்தலின்,
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.


4. ஐம்பொறிகளாகிய புறக்கருவிகளைப் போன்றே எழுச்சியோடு ஒன்றினைப் பற்றி எண்ணித் துணிகின்ற அகங்காரம், புத்தி போன்ற உட்கருவிகளும் உள்ளன. உட்கருவிகள் உயிரின் அறிவு மண்டலத்தைச் சார்ந்தவை. உயிர் உட்கருவிகளில் ஒன்றாகாது. அமைச்சரைத் துணைக் கொள்ளும் அரசனைப் போல் உட்கருவிகளின் துணையால் உலகப் பொருள்களை அறிந்து மகிழும் ஆயினும் ஆணவமலப் பிணிப்பினால் ஒரு தன்மையாக அறிதலின்றிக் கருவிகளோடு கூடியும் நீங்கியும் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் ஆகிய நிலைகளை அடையும்.

அந்தக் கரணம் அவற்றின்ஒன்று அன்று; அவை
சந்தித்தது ஆன்மா சகசமலத்து உணராது;
அமைச்சுஅரசு ஏய்ப்ப நின்று அஞ்சுஅவத்
தைத்தே

5. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய கருவிகள் உயிரின் துணையினால் அறிகின்றன. ஆனால் அக்கருவிகள் உயிரை அறிவதில்லை. உயிரும் தன் அறிவிற் கலந்து நின்று தன்னை இயக்கும் முதல்வனின் அருளினால் உலகத்தை அறிகிறது. ஆனால் தன்னையோ தன் உணர்வில் கலந்து நிற்கும் முதல்வனது திருவருளையோ உணர்வதில்லை. உயிர் கருவிகரணங்களோடு கூடிப்பொருள்களை அறிகின்றது. கடவுளோ உயிருக்கு அறிவித்துத் தான் வேறாகிய விகாரமின்றி நிற்கின்றது. காந்தத்தின் முன் உள்ள இரும்பு போல் கடவுளின் முன்னிலையில் உயிர் செயல் புரிகின்றது.

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்துஅறிந்து, அறியா; ஆங்குஅவை
தாம்தம் உணர்வின் தமியருள் [போலத்
காந்தம் கண்ட பசாசத்து அவையே.





## இட்டலிங்கேசுவரரை வழிபடுங்கள்

சென்னை அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள எழிலார்ந்த ஆலயம் அருள்மிகு இட்டலிங்கேசுவரர் ஆலயம், தானே முளைத்தெழுந்த மூர்த்தி. சுயம்புலிங்கம். அன்பர்கள் வேண்டிய வற்றை வேண்டியவாறே அருளுபவர் ஆதலால் இட்டலிங்கேசுவரர் என்ற திருநாமம் இவருக்கு வழங்குகிறது. அருள்மிகு அபயாம்பிகை உடன் உறையும் அருள்மிகு இட்டலிங்கேசுவரரை வழிபட்டு அன்பர்கள் அருள்பெற வேண்டுவதோடு, வேதாகம வகுப்புகள் இங்கு இலவசமாக மாணவர்களுக்கும், அர்ச்சகர்களுக்கும் பயிற்றுவித்துச் சான்றிதழும் வழங்குகிறார்கள். அன்பர்கள் பங்கேற்றுப் பயன் பெறலாம்.

6. உயிர்கள் கடவுளை அறியவில்லை. அவ்வாறெனில் கடவுள் அறிய முடியாத பொருளோ என்ற ஐயம் எழலாம். உயிர் தன் சிற்றறிவினால் அளந்தறியும் பொருள்கள் எல்லாம் தோன்றிநின்று மறைவன. கடவுளையும் உயிர் அளந்தறியும் எனில் கடவுளும் அழியும் தன்மை உடைய பொருளாகிவிடும். அறிந்து கொள்ளவே முடியாதெனில் கடவுள் இல்லாத ஒன்றாகி விடும். கடலில் இறங்கி நீராடலாம். ஆனால் கடலின் ஆழமும் அகலமும் அளந்தறிய இயலாது. அவ்வாறே அருளின்துணைக் கொண்டு கடவுளை அறிந்து இன்புறலாம். ஆனால் சிற்றறிவினால் அளந்தறிய முடியாது என்று கடவுள் இயல்பினைக் கண்டறிந்தோர் கூறுவர்.

உணர்உரு அசத்துஎனின், உணராது
இன்மையின்
இருதிறன் அல்லது சிவசத்து ஆம்என
இரண்டு வகையின் இசைக்கும்மன் உலகே.

7. இறைஉயிர் தளை என்ற முப்பொருள்களில் உயிரின் அறிவினைத் தளைப்படுத்தி நிற்கும் பாசப் பொருள் ஒளியின் முன் விளங்காத இருள் போல் இறைவன் முன்விளங்கித் தோன்றாது. ஆதலின் இறைவன் பாசப் பொருளை அறிவதில்லை. பாசப்பொருள் அறிவற்றதாகலின் பரம் பொருளை அறிவதற்கு இல்லை. பாசப் பொருளைப் போல் அறிவற்றதும் பரம்பொருளைப்

போல் முற்றறிவுடையதும் ஆகாத உயிரே பாசத்தால் கட்டுண்டு உழலும், பரம்பொருளோடு கூடியும் மகிழும்.

யாவையும் சூனியம் சத்துஎதிர்; ஆதலின்
சத்தே அறியாது; அசத்துஇலது, அறியாது;
இருதிறன்அறிவுஉளது இரண்டுஅலா ஆன்மா

8. பரம்பொருளை அறிவதற்குரிய உயிர் ஏன் பாசத்தோடு உழல வேண்டும்? மன்னவன் மகன் குழந்தைப் பருவத்திலேயே வேடரிடத்தே தங்கி வளர்ந்ததைப் போல் உயிரும் ஐம்புல வேடரிடை அகப்பட்டுத் தன்னையும் தலைவனையும் அறியாது அயர்கின்றது. உலக வாழ்வில் பன்னாள் உழன்ற தன் பயனாக உண்மை உணரும் தகுதி வந்த போது இறைவனே குருவாக வந்து மெய்யுணர்வு அளிக்கின்றான். உலக வாழ்க்கையில் மயங்குவதை விடுத்து உயிர்இறைவன் திருவடியினை அடைகின்றது.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து,
எனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில்
உணர்த்த, விட்டு,
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

9. இறைவனைப் புறக்கண்களால் காணமுடியாது. ஞானக் கண்ணினால் உள்ளத்தே காணவேண்டும். திருமாலும் நான்முகனும் தேடி தேட ஒண்ணாத இறைவனை உள்ளத்தின் உள்ளே தேடிக்கண்டு கொண்டால் இதுவரை இன்பம் தருவது போல் மயங்கித் துன்பத்திற்கே காரணமாகி நின்ற கானல்நீர் போன்ற பாசப்பற்று நீங்கும்; பரம்பொருள் குளிர்நிழலாய்அருள் செய்யும், பாசத்தை விட்டகன்று பரம்பொருளைச் சேரும் கருத்தோடு ஐந்தெழுத்தினை எண்ணுதல் வேண்டும்.

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி,
உராத்துணைத் தேர்த்துஎனப் பாசம்
ஒருவத்
தண்நிழலாம் பதி; விதி எண்ணும்அஞ்
செழுத்தே.

10. ஆணவ மலக்கட்டுற்ற காலத்தில் உயிர்க்கு உயிராகிய முதல்வனை உணராது, யான் எனது என்ற செருக்குற்று உழன்ற உயிர், மெய்யுணர்வு கைவந்த பின் முதல்வனை உணர்ந்து அவன் அருள் வழி நிற்கின்றன. இந்நிலையில் உயிர் இறைவனோடு ஏகனாகி (இரண்டறக் கலந்து) நிற்கின்றன. யான் என்ற முனைப்பின்றி அருள் வழி நிற்கும் உயிரின் செயல்கள் இறைவன் செயல்களாகி விடுகின்றது. எனவே உயிர்களுக்கு வினைத் தொடர்பும், ஆணவ மலத்தின் பிணிப்பும், மாயையின் மயக்கமும் இல்லையாய் நீங்கிவிடும்.

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலம்மாயை தன்னொடு வல்வினை இன்றே.

11. காணுகின்ற கண்களுக்குக் காட்டுகின்ற உயிர்போல், உயிர்களுக்கு உலக நுகர்வை அளித்து வந்த இறைவன் இப்போது உயிர்கள் தன்னையே கண்டு களிக்குமாறு அருள் செய்கின்றான். இறைவன் தனக்குச் செய்கின்ற பேருதவியினை அறிந்து கொண்ட உயிர் அயராத பேரன்பு கொண்டு உள்ளம் உருகி இறைவன் திருவடிகளைச் சென்று கூடுகின்றது.

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே

12. ஆனந்தத் தேன் சொரியும் செந்தாமரை மலர் போன்ற சிறப்பினை உடைய, தன்னைச் சரண்என்று வந்தடைந்தவர்களைத் தாங்கிக் கொள்ளுகின்ற வலிமை சான்ற திருவடிகளைச் சென்று கூட ஒட்டாது தடுத்து வந்த ஆணவ மலத்தினை முழுவதும் அகற்றியவர்கள் அன்பர்களோடு கூடி இன்புறுதலும், அடியவர்களது சிவவேடத்தையும் திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனிகளையும் சிவமெனவே கண்டு வழிபடுவதுமே இயல்பாகக் கொண்டு மெய்யுணர்வு நிலையில் பிறழாது நிற்பர்.

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழிஇ, அன்பரொடு மரீஇ,
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே.
இவையே சிவஞான போதம் உணர்த்தும்
செம்பொருள்:

**சிவஞான போதச் செந்நெறி:—**

சிவஞானபோதத்தை ஓதி உணர்வதன் பயன் யாது? சிவஞானபோதம் நமக்கு உணர்த்தும் செந்நெறி யாது?

தோற்றமில்லாக் காலமாகவே ஆணவமலம் உயிர்களைப் பற்றி அலைக்கழிக்கின்றது. ஆணவ மல நீக்கத்தின் பொருட்டே உலகம் படைத்தளித்து, அழிக்கப்படுகின்றது. ஆணவ மலமறைப்பினால் ஐம்புலன்களுக்கு ஏவல் செய்து அயரும் உயிர் வினைகளைப் பெருக்கிப் பிறவிக்கடலில் விழுந்து போக்குவரவு புரிகின்றது. ஐம்புலப் பகையை வெல்லுவதே அறிவுடைமை, அறிவாகிய தோட்டியால் ஐம்புலக்களிற்றினை அடக்குவதே உலகியல் கூறிப் பொருள் இது என்ற திருவள்ளுவ நெறியும் ஆகும். மாறி நின்று மயக்கும் வஞ்சகப் புலன்களை வெல்லுதற்கு வழி அருளாசிரியன் நல்லருளால், உள்ளக் கோவிலில் இறைவனைக் காணுதலே. இதன் பொருட்டு ஐந்தெழுத்தினை விதிப்படி எண்ணுதல் வேண்டும். நல்லாரிணக்கமும் வழிபாட்டு உணர்வும் அதற்கு வாயிலாகஅமைவன. எனவே அன்பரோடு கூடி அடியவர்களைப் போற்றி ஆலய வழிபாட்டினைப் புரிந்து ஐந்தெழுத்தினை எண்ணுவோம். வினைப் பகையை வெல்வோம்; ஆணவ அழுக்கினை அகற்றுவோம்; மாயையின் மயக்கத்தை மாற்றுவோம். இதுவே சிவஞான போதச் செந்நெறி.

அஞ்சினால் இயற்றப்பட்ட
ஆக்கைபெற்று அதனுள் வாழும்
அஞ்சினால் அடர்க்கப் பட்டு இங்கு
அழிதரும் ஆதனேனை
அஞ்சினால் உய்க்கும் வண்ணம்
காட்டினாய்க்கு அச்சம் தீர்ந்தேன்
அஞ்சினாற் பொலிந்த சென்னி
அதிகைவீ ரட்ட னீரே

**—அப்பரடிகள்.**

மெய்கண்டதேவர் மெல்லடி போற்றி
சிவஞான தேவர் சீரடி போற்றி

# அந்தகாசூரனை வதைத்த திருக்கோவலூர் வீரட்டானம்



தி. இராசமாணிக்கம், பி.ஏ., பி.காம்.

இறைவனது அளப்பற்ற ஆற்றலை உணர்த்தும் எட்டு வீரட்டதலங்களில் திருக்கோவலூர் ஒன்று. தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ளது. இது தேவாரப் பாடல் பெற்ற நடுநாட்டுத் திருத்தலங்களில் 11-வது ஆகும். மேலூர், கீழூர் என்ற இரு பகுதிகளைக் கொண்ட இது தென் பெண்ணை ஆற்றங்கரையில் உள்ளது.

கீழூரில் சம்பந்தர் மற்றும் அப்பர் பெருமக்களால் பாடப்பெற்ற வீரட்டதலம் உள்ளது. 63 நாயன்மார்களில் மெய்ப்பொருள் நாயனார் தோன்றிய பதி இது. மேலூர் முதல் மூன்று ஆழ்வார்கள் சந்தித்த சிறப்பினைக் கொண்டது. பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகியோரால் மங்களாசாசனம் செய்ய பெற்ற திவ்ய தேசம் இது.

சிவாலயத்தில் பெரியானைக் கணபதி மேல் ஔவை மூதாட்டியார் ''சீதக்களபச் செந்தாமரை'' எனத் தொடங்கும் விநாயகர் அகவல் பாடியுள்ளார். இங்குள்ள முருகப் பெருமான் அருணகிரிநாதரின் திருப்புகழ் பெற்றவன். பண்டை நாள் வாழ்ந்த கடையேழு வள்ளல்களில் ஒருவனான திருமுடிக்காரியின் தலை நகரமாக விளங்கியது. ஔவை மூதாட்டியின் முயற்சியால் இந்நகர மன்னன் தெய்வீகன் பாரியின் மக்கள் அங்கவை மற்றும் சங்கவை ஆகியோரைத் திருமணம் செய்ததாக வரலாறு கூறுகிறது.

இறைவனார் தம் மூன்று கண்களை அன்னை மூட, அதனால் ஏற்பட்ட இருட்செறிவில் தோன்றியவன் அந்தகாசுரன். அவனால் தேவர்களுக்கு ஏற்பட்ட துன்பத்தைத் துடைக்க, அவனுடன் சிவபெருமான் போரிட்டார். அவ்வமயம் சிவபெருமானுக்கு உறுதுணையாக பிரம்மா, மகேசுவரன், திருமால், வராக மூர்த்தி, முருகன், இந்திரன், யமன் ஆகியோர் தத்தம் சக்திகளை அனுப்பினர். அவர்கள் சப்த கன்னியர் எனப்பட்டனர். சிவபெருமான் சூலத்தால் அசுரனைக் கோத்து சூடினார், அதனால் துன்பமுற்ற அசுரன் இறைவனை அடைக்கலம் அடைந்தான். தன்னை அடைக்கலம் அடைந்தோரைக் காப்பவன் அல்லவா, பெருங்குணத்தானான இறைவன்!

''மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்து அடைபால்
கண்ணுதலான் பெருங்கருணை கைகொள்ளும்'.

என்பது சேக்கிழார் பெருமானது திருவாக்கு. அந்தகாசூரனை இறைவன்மன்னித்து தன் சிவகண தலைவர்களில் அவனை ஒருவனாக்கினார். இது நடைபெற்றதாகப் போற்றப்படும் திருத்தலம் திருக்கோவலூர் வீரட்டானம்.

மேற்கு நோக்கி அமைந்துள்ள இந்தத் திருக்கோவிலில் காண வேண்டிய கலைச் சிறப்பு மிக்க திருவுருவம் அந்தகாசுரவதமூர்த்தியாம். இந்த வடிவின் காலடியில் அந்தகாசுரன் காணப்படுகிறான். சூலத்தை ஏந்த உயர்ந்தும் தாழ்ந்தும் உள்ள இறைவன் கைகள் இந்த வடிவிற்கு உயிர் ஊட்டுவனவாக உள்ளவை. சோழர்கால உலோகக் கலைச் சிறப்பை உலகிற்குப் பறைசாற்றும் எழிலார்ந்த வடிவமாக இது திகழ்கிறது. 8 கைகள் கொண்ட துர்க்கையின் வடிவமும் இங்குகாண வேண்டிய ஒன்றாகும்.

பல்லவர்கள், சோழப் பேரரசர்கள், இராஷ்டிகூட மன்னன் ஆகியோரின் கல்வெட்டுகள் பல இங்கு உள்ளன. மாமன்னன் முதலாம் இராசராச சோழனின் கல்வெட்டினின்றும் அவன் மேலைச் சாளுக்கியர்கள், தேவகிரி சேவுணர்கள், கலிங்க நாட்டு மன்னன், மலைநாட்டு மன்னன் ஆகியோரை வென்றது தெரிய வருகிறது.

சமயச் சிறப்பு, கலைப்பெருமை ஆகியவற்றுடன் இந்தத் திருக்கோயில் வரலாற்றுக் கருவூலமாகவும் திகழ்கிறது.

# முருகன் அறுபடை வீடுகள்

*பாரதி தீர்த்ததாசன்*

## 1. பரங்குன்றில் வி்ளங்கும் பரமதயாளன்

''சுக்குக்கு மிஞ்சி மருந்தில்லை; சுப்ரமண்யத்திற்கு மிஞ்சி தெய்வமில்லை'' என்பது பழமொழி. மற்ற தெய்வங்கள் இருவிழிகளால் அருள் நோக்கமளித்து இருகரங்களால் அள்ளித்தருவர். முருகப் பெருமானோ பன்னிருவிழிகளாலும் நோக்கி, பன்னிரண்டு திருக்கரங்களாலும் அள்ளித்தந்து அருள் பாலிக்கும் பெருமான். அப்பெருமான் எழுந்தருளியுள்ள தலங்களில் ஆறுபடை வீடுகள் என்னும் ஆறுதலங்கள் மிகமிக முக்கியமானவைகளாகும். அத்தகைய படைவீடுகளில் தென் பாண்டி நாட்டின் தலை நகரின் அருகாமையிலுள்ள திருப்பரங்குன்றம் என்பதை முதற் படைவீடு என்பர்.

இந்தத் திருத்தலத்திற்குத் தலபுராணம பாடியவர் நிரம்ப அழகிய தேசிகர் என்ற பெரியார். இப்பெரியவர் சேது புராணம், திருவையாற்றுப் புராணம் முதலானவைகளையும் அருளிச் செய்துள்ளவர். இப்பெருந்தகை தமது திருப்பெயருக்கேற்ப மிக அழகாகக் கவிபாடக் கூடிய ஆற்றல் படைத்தவர் என்பதை திருப்பரங்குன்றம் தலபுராணத்திலுள்ள விநாயக வணக்கப் பாடலே காட்டுகிறது.

தமிழில் ஒன்று முதல் எண்கள் வரிசையாக வருமாறு பாடும் அழகினை எண்ணலங்காரம் என்பர். அம்முறையில ''வஞ்சகத்தில் பொருந்தாதவன் (ஒன்றானை) மிகத் **திரண்ட** துதிக்கையை உடையவர், வணங்காதவர் உள்ளத்தில் தன் திருவடியைப் பதிக்காதவர் (சரணமூன்றானை), வேதங்களைக்கூறிய தொங்கும் வாயுடையவன் (நால்வாயானை), அசுரருக்குப் பயப்படாதவர் (அஞ்சானை), திருமுடியிலே கங்கையைத் தரித்தவரும் (கங்கையாறானை), குற்றமில்லாதவர் (துகள் எழானை) வேதங்களுக்கும் எட்டாதவரான கற்பக விநாயகனை வணங்குவோமாக'' என்கிறார்.

வஞ்சகத்தில் ஒன்றானைத் துதிக்கை மிகத்
திரண்டானை
வணங்காருள்ளே
அஞ்சரணமூன்றானை, மறைசொலு
நால்வாயானை:
அத்தனாகித்
துஞ்சவுணர்க்கு அஞ்சானை: சென்னியணி
யாறானைத்
துகள் எழானை.
செஞ்சொன்மறைக்கெட்டானைப்
பரங்கிரிவாழ்
கற்பகத்தைச் சிந்தை செய்வாம்.

அகத்தியர் ஏழு கடல்களையும் தன் ஒரு உள்ளங்கையில் உளுந்தளவாக்கி உண்டார்என்பர். என்னால் முடியுமா? கடலை உள்ளங் கையிலடக்கி விடுவேன் என நானும் கூறுவது போல் ஞானக் கடலான திருப்பரங்கிரிப் பெருமானின் வரலாறு கூற புகுந்தேன் எனறு அவையடக்கத்துடன் புராணத்தை ஆரம்பிக்கின்றார்.

ஒரு சமயம் கைலையில் சிவபெருமான்பார்வதி தேவியைத் தன் அருகில் இருத்திப் பஞ்சாட்சரமான ஐந்தெழுத்தின் பெருமையையும் பிரணவமென்னும் ஓம் என்ற ஒரெழுத்தின் பெருமையையும் விரிவாக உபதேசித்தார். இருவருக்கும் நடுவில் குழந்தையுருவிலிருந்த முருகப் பெருமானும் அப்பொருளை நன்கு கவனித்து அறிந்து கொண்டார்.

குழந்தை யுருவிலிருந்த முருகப் பெருமானுக்கு ஐந்து வயது நிரம்பியது. பிரமனை அழைத்து ''இக்குழந்தைக்கு கல்வி கற்பிப்பாயாக'' எனக் கட்டளையிட்டார் சிவபெருமான். கல்வி பயில ஆரம்பித்த அன்றே முருகப்பெருமான் ஓம் பிரவணத்திற்குப் பொருள் கூறுமாறு பிரமனைக் கேட்க, ''யாவும் அறிந்து கடைசியில் அறிய வேண்டிய பிரணவத்தைக் கேட்கும் குழந்தையின்தன்மை கண்டு திடுக்கிட்ட பிரமன் சிவபெருமானிடம் கூறினார். சிவபெருமான் முருகப் பெருமானிடம் குருவான பிரமனை இவ்வாறு அவமதிப்பது குற்றமெனக் கூறினார். ''பிரவணத்தின் பொருள் கூடத் தெரியாத இவர் வேதத்தை எவ்வாறு கற்பிப்பார்?'' என முருகன் கேட்டனர். அம்மைக்கு உபதேசம் செய்த காலத்தில் நடுவிலிருந்த தானும் அதைக் கேட்டு அறிந்ததாகக் கூறினார். ''குரு மூலமாக எதையும் கற்பதுதான் நேர்மை, பிறருகசு ஒன்றைக் கூறும்போது அதைக் கேட்பது குற்றம். ஆதலால் எவர் குற்றம் செய்தாலும் அதை ஏதாவது பரிகாரம் செய்து குற்றத்தை நீக்கிக் கொள்ள வேண்டும். எனவே நீதியை இயற்ற நீ தவம் செய்யல் வேண்டும். தென்பாண்டி நாட்டிலுள்ள சத்தியகிரியில் (திருப்பரங்குன்றத்திற்கு அவ்வாறு ஒரு பெயர் உண்டு) சென்று தவமியற்றுக'' என முருகனை ஏவினார் சிவபெருமான். தெய்வ நிலையிலிருக்கும் தன் மகனானாலும் குற்றம் செய்தால் அதற்கு ஏற்ற பரிகாரம்செய்தே தீர வேண்டும் என்ற தெய்வ நீதியை இங்கு காண்கிறோம்.

முற்காலத்தில் ஆதிசேடனும் காற்றின் தெய்வமான வாயுதேவனும் போட்டி போட்டுக் கொண்டனர். ஆதிசேடன் மேரு மலையைத் தன் நீண்ட உடல் கொண்டு வளைத்து இறுகப் பிடித்துக் கொண்டார். வாயு பெருங்காற்றாக அடித்து மேருவை அசைத்தார். கணாடம், சுணாபம், கந்தருவம், சுகேது, மந்தரம், சத்ய சிருங்கம், வைநியம், சித்திரம் என்ற மேருமலையின் எட்டுச் சிகரங்களில் சத்யசிருங்கம என்ற மலைதெறித்துத் தென்னாட்டில் வந்து விழுந்தது.



அதுவே திருப்பரங்கிரி. முருகப்பெருமான், திருப்பரங்கிரி வந்தபோது அமமலையின உச்சியிலுள்ள சோலைகள் சடைகளாகவும், சுனை கங்கை போன்றும், வெண்பாறை சந்திரன் போன்றும், வெண் மேகம் வெண்ணிற வபூதியான திருநீறு போன்றும், மலையிலுண்டான மின்னல் பூணூல் போன்றும், அருவிகள், மேல உத்தரீயமான அங்கவஸ்திரம் போன்றும் காட்சி தர, முருகப்பெருமான் அம் மலையைச் சிவபெருமானாகவே கண்டார்.

சிமைய மார்பொழில் சென்னியில் வேணியாம்:
அதன்மேற்
தமர வெண்சுனைக் கங்கையாம்: தழைத்த
வெண்பாறை
இமைதரும் பிறை: புயல் பொடி: எழுந்த
மின்புரிநூல்,
அமையும் வெள்ள நீர் உத்தரீயம். கிரியானாம்

இப்படிப்பட்ட மலையின் வடகிழக்குப் பக்கத்தில் தன் வேலாயுதத்தால் பூமியைக் கீறி, சரவணப் பொய்கை என்ற நீர் நிலையை உண்டாக்கி ஒரு சிவலிங்கத்தை பிரதிட்டை செய்து முருகப்பெருமான் மூன்று வருடங்கள் தவம் செய்ய இறைவன் அம்மையுடன் தன் காளையின் மீது ஏறி வந்து காட்சியளித்தார் ''நீதியை நிலை நிறுத்த, எவராயிருந்தாலும் குரு உபதேசமின்றி வித்தை கற்பது வீண் எனக் காட்டவே உன்னையும் தவஞ்செய்யுமாறு கூறினோம். இத்திருப்பரங்குன்று தரிசித்தோர் பாவங்களை நீக்குந் தலமாகவும், சரவணப் பொய்கையைக் கையால் தீண்டினாலும் பாவங்களை அழிக்கும் புண்ணிய தீர்த்தமாக விளங்கட்டும்'' எனக் கூறி மறைந்தார்.

அயோத்தியை ஆண்ட சிபி மன்னனைக் காண வந்த கௌதம ரிசி .''அரசே! நீ பிறந்த அன்று உன் ஜாதகத்தில் செவ்வாய், சனி, ராகு, கேது நான்கு கோள்கள், சரியாக அமையாது உனக்கு வாழ்க்கையில் துன்பங்கள் ஏற்படும்படி அமைந்தன. எனினும் நீ பற்பல தரும காரியங்களைச் செய்ததால் அவை உன்னை ஒன்றும் செய்ய முடியவில்லை.

தருமமே தனித்த ஞான்று தக்கதோர்
துணையதாகும்
தருமமே பொருள்கள் நாலும்தந்திடும் வருண
நாலும்
தருமமே மெய்யாகச் செய்யும். சமயம் ஆறும்.
உடனே மற்றுந்
தருமமே காக்கும்; வேந்தர்தட முடி இடரும்
தோளாய்!

(சோதிடம் உயர்ந்த ஒரு கலை. என்ன நடக்கும் என்பதையறிந்து எச்சரிக்கையாகஇருக்கலாம். மழை, அல்லது வெயில் முதலானவற்றிற்கு அவற்றினால் ஏற்படும் துன்பத்தைக் குறைக்க குடை காலணி முதலானவைகளை உபயோகிக்கிறோம். மழை, வெயிலை எப்படி நிறுத்த முடியாதோ அது போல வரும் எந்தத் துன்பத்தையும் நிறுத்த முடியாது. இவற்றின் கொடுமையைக் குறைப்பதற்குத் தான் பரிகாரங்கள் செய்வர். சோதிடத்தின் பெருமை தெரியாத பலர் அதைத் தொழிலாகக் கொண்டு மக்களை ஏமாற்றி வருவதால் வேத நூலில் ஆறு அங்கங்களில் ஒன்றான சோதிடம் பொய் என்று பலர் எண்ணும்படி செய்துள்ளது. இறைவனருளால் இந்த சாத்திரம் நல்லார் கைப்பட்டு உலகிற்கு நன்மை செய்ய வேண்டுவோம்) கிரகங்கள் கொடுமையானவைகளானாலும் தருமம் செய்து தரும வழியில் நடப்பவரை அவை ஒன்றும் செய்ய இயலாது என்பதைக் காட்டுகிறது மேற்படி பாடல், ''சிபிசக்கரவர்த்தி! தானங்களில்

சிறந்தது பூதானம். தக்க பெரியோர்களான வேதம் படித்தவர்கட்கு பூதானம் செய்வாய்'' எனக் கூறிச் சென்றார் கௌதமர்.

சிபி சககரவர்த்தி தன் பரிவா,ங்களுடன் புறப்பட்டுத் தென்னாடு வந்து மதுரையில் சிவ தரிசனம் செய்து கொண்டு திருப்பரங்கிரியில் சரவணப் பொய்கையில் நீராடிப் பலவிதமான தானங்களைச் செய்தான். அங்கு நாரதர் எழுந்தருளி திருப்பரங்கிரியின் பெருமையைச் சிபியரசனுக்கு எடுத்துக் கூறினார்.

பூதானம் செய்ய ஆவல் கொண்ட சிபி மன்னன் காசியிலிருநது வேதவித்துக்களான ஐந்நூறு அநதணர்களை வரவழைத்து அவ,,கள் தங்குவதற்காக சதுர்வேதிமங்கலம் என்னும் கிராமத்தை அவர்கட்கு கையில் நீர் வார்த்து பூமி தானம் செய்தபோது ஐந்நூறில் ஒருவர் குறைவது கண்டு திடுக்கிட்டு வருந்தியபோது சிவசின்னங்கள் தரித்த ஒரு அந்தணர் அரசன் எதிரில் தோன்றினார். அவர் தன் மனைவியுடனும் இரண்டு குமாரர்களுடன் வந்தார். உமாதேவியும் விநாயகப் பெருமானும் வந்ததை இவ்வாறு குறித்தார். சிபி மன்னன் அவ்வந்தணரை எதிர் கொண்டழைத்து ''சுவாமி! தாங்கள் எந்த ஊர்! தங்களின் திருப்பெயர் என்ன?'' எனக் கேட்க, அவர் ''அரசனே; நம் பெயர் திருப்பரங்குன்றம் பரமேசுவர ஐயர். எல்லா சிவத்தலங்களுக்கும் யாத்திரை சென்று இது உயர்ந்த தலமானபடியால் இங்கேயே இருக்க வந்தோம்'' என்றார்.

என்ற பின் எவ்வூர்? எப்பெயர் உரைத்தி என்றிட
வேதனாய் வருவோன்
வென்றிசேர்ஒன்னார் வல்லுயிர் குதட்டி விழுங்கிட
வாள் விதிர்த்தவ கேள்
ஒன்றிய நம் பேர் பரங்கிப்பரமன். உலகினிற்பதி
யெலாம் திரிவோம்
நன்றிசேர்தலத்துப் புனிதம் ஈதெனவே நாமுமிங்
குறைந்திட வந்தோம்

சிபி அவருக்கும் பூதானம் செய்து அயோத்தி திரும்பி நன்கு வாழ்ந்தான்.

! ! ! ! !

கௌதமி என்ற நதியின் கரையிலே வாழ்ந்த ஒரு நல்லோனான அந்தணனுக்கு தேவத் துதி என்ற முனிவர் ''நான் எல்லாத் திசைகளிலும் உள்ள புனித நீராடி வந்தோம்; திருப்பரங்குன்றத்தில் சததிய திர்த்தம், வயித்திய சார கூவ தீர்த்தம் என ஒன்றும் உண்டு. அது சந்திரனுக்கு ஏற்பட்ட குட்டநோயை அகற்றியது. கோவிதாரத்துவசன் என்ற ஒரு பாண்டிய மன்னன் அகத்தியரை மதியாமல் அவமதித்ததால் அவரது சீடனான பிரமிட்டமுனி இந்திரனுக்குக் குட்டநோயை உண்டாக்குமாறு சபித்தார். பாண்டியன் முனிவரை வேண்ட ''திருப்பரங்கிரியில் பிரமசார கூவ தீர்த்தத்தில் நீராடி பிரமன் சரசுவதியை மணந்தான். அங்கு நீராடினால் உன் குட்டநோய் நீங்கும்'' எனறார். இந்திரன் வயித்தியசார கூவத்தில் நீராடித் தனது நோய் நீங்கப் பெற்றான்'' எனத் தீர்த்தத்தின் பெருமை கூறி முடித்தார் தேவதுதி முனிவர்.

இந்த தெய்வீகத் தலத்தில் விசாக நாளிலோ, சஷ்டியிலோ பூசை செய்தாலும், ஒருநாள் தங்கினாலும், இது என் பிறந்த ஊர் என நிரந்தரமாகத் தங்கினாலும், அவர்களுக்கு நற்கதி கிட்டும் எனத் தல விசேடம் பாடப் பெற்றுள்ளது.

வாய்மையே வெல்லும் என்று நம்பிய அரிச்சந்திரனும், தென்னாட்டு யாத்திரை செய்யுங்கால் பழமலை என்ற விருத்தாசலத்தில் உரோமச மகரிசி எனபவரைச் சந்தித்து அவர் மூலமாக திருப்பரங்குன்றம் பற்றிய விவரங்களை அறிந்து அத்தலத்தினையடைந்து நீராடி வழிபாடு செய்து அருள் பெற்றான் எனகிறார். அங்குள்ள ஆலயங்களைப் புதியதாகக் கட்டித் திருவிழாக்கள் நடைபெற உதவிய புண்ணியத்தால் அரிச்சந்திரன் சத்தியம் தவறாதவனாக விளங்கினான் என்கிறார்.

சிவபெருமானது கவியில் குற்றங்கண்டு 'நெற்றிக்கண் காட்டி என்னை நீற்றிடினும் உன் குற்றம் குற்றமே'' என எதிர்ததுப் பேசிய வீரத் தமிழன் என நக்கீரனுக்குச் சிலர் பட்டம் சூட்டுவர். சிவபெருமானுடைய கோபத்திற்கு ஆளாகியதன் காரணமாகத் தன் உடம்பு பூராவும் தொழு நோயால் பீடிக்கப்பட்டான் நக்கீரன். தென் கயிலை என்னும் சீகாளத்தி சென்று, 'கைலை பாதி காளத்தி பாதி'' என்ற நூல் பாடி, தன் குற்றம் அறிந்து, ''கூடலாலவாய்க் குழகனானவா! அறியாது அருந்தமிழ் பழித்தேன்'' எனக் கோபப் பிரசாதம், பெருந்தேவபாணி முதலானவை பாடித் தன்தொழு நோய் நீங்கப் பெற்று, தமிழ்ச் சங்க தலைவனானான். சிவபெருமான் அவனுக்கு அகத்தியரைக் கொண்டு தமிழிலக்கணத்தைப் போதித்தார். இலக்கணம் கற்ற நக்கீரன், தன் பாடல்களிலேயே அனேக குற்றங்களிருப்பது கண்டு வெட்கி ''இவ்வளவு குற்றங்களுடன் கவிபாடிய நான் இறைவனின் பாடலில் குற்றங் கண்டேனே''என வெட்கித் தன் குற்றத்தை உணர்ந்து சிவபெருமானை அதிக பக்தியுடன் வழிபட்டான். குற்றம் செய்வதைக் காட்டிலும, தன் குற்றத்தை உணருவதற்கு அதிக தைரியம் வேண்டும். அந்த உயரிய குணமே நக்கீரனை வீரத்தமிழன் ஆக்கியது.

இத்தகைய கீரன் சிவபெருமானைத் தவிர எவரையும் பாடுவதில்லை என ஒரு கொள்கையைக் கடைப்பிடித்தான். திருப்பரங்கிரியிலுள்ள சிவபெருமானைப் பூசித்துப் பஞ்சாட்சர செபம் செய்தனன். அவ்விடம் இன்றும் பஞ்சாட்சரப்பாறைஎன விளங்குகிறது என்பர். ஒரு நாள் பாறை ஓரத்திலிருந்த ஒரு மரத்திலிருந்து இலை ஒன்று உதிர்ந்து அது பாதி இலை தண்ணீரிலும், பாதி இலை தரையிலும் விழ, தண்ணீரில் விழுந்த பாகம் மீனாகவும் தரையில் விழுந்த பாகம் பறவையாகவும் ஒன்றையொன்று இழுக்க, இது கண்டு இரக்கம் கொண்ட நக்கீரன் இரண்டையும் தனித்தனியாக்க வேண்டுமென்ற நல்ல உள்ளத்தில் கிள்ள, மீன், பறவை இரண்டும் துடித்து இறந்தன. முருகப்பெருமானது ஏவலால் அங்கு தோன்றிய உக்கிரன் அண்டாபரணன் என்ற காவலர் 'பரங்கிரியில் கொலை செய்தாயா?' எனக் கோபித்துச் சிறைக்குகையில் அடைத்தனர். முருகப் பெருமானைப் பாடாத குற்றம் இது என அறிந்து, நக்கீரன் 'உலகம்' என்ற மங்கல மொழியால் தொடங்கி 'மலைகிழவோனே' எனத் திருமுருகாற்றுப்படை என்னும் தோத்திர நூல் பாடினான். அன்று இரவு முருகப்பெருமான் நக்கீரனின் கனவில் தோன்றி ''நாம்பூவுலகில் கிழவனாக வரச் சிலகாலமாகும்'' என்று கூற, நக்கீரன் வெட்கமடைந்து ''பெருமானே! என்றும் இளையவன்'' எனப்பொருள் கிடைக்கும் படி

''குன்றம் எறிந்தாய்! குரைகடலில் சூர்தடிந்தாய்!
புன்றலைய பூதப்பொருபடையாய்! — என்றும்
இளையாய்! அழகியாய்! ஏறூர்ந்தான் ஏறே!
உளையாய் என் உள்ளத்து உறை.''

என்ற வெண்பாவைப் பாடினான். முருகன் நேரில் காட்சி கொடுக்க:

பனிவரையின் மகனாதவ உண்டருளும்
செங்கனிவாய்ப் பாலா போற்றி
குனிசிலைவேள் மிகநாண வடிவழகு கொண்டருளும்
குமரா போற்றி!
வினையமெழுஞ் சூர்கிளையை வேரறுக்கஉளத்தில்
வைத்தவிருத்தாபோற்றி!
முனிவருளம் கனியமிக வரங்குலவு பரங்கிரியின்
முருகாபோற்றி

என மனிதப்பிறவியின் எல்லாப் பருவங்களையும் வைத்துப் பாடினான். 'திருமுருகாற்றுப்படை பாராயணம் செய்பவர் எல்லா நலன்களையும் அடைவர்'' என நக்கீரனுக்கு விடை கொடுத்து இறைவனான முருகன் மறைந்தனர்.

பராசரின் மக்களான தத்தன், நந்தி, பரிதி, பாணி, சனுமுகன், நவமாலி ஆகிய அறுவரும் விளையாட்டாகச் சரவணப் பொய்கையிலுள்ள மீன்களை பாறையில் வெய்யிலில்போட்டுத் துடிக்கு மாறு செய்தனர். பராசரர் அவர்கள் தம் மக்கள் என்று பாராது ''நீங்கள் அறுவரும் மீன்களாகப் பிறந்து சரவணப்பொய்கையில் வாழுங்கள். முருகப் பெருமான் அங்கு ஆறுதாமரைகளில் வளர்வார். அம்மை பராசக்தி ஆறுகுழந்தைகளை வாரியெடுப் பார். அம்மையின் மடிசுரந்து அம்பினால் ஒழுகும் பால் சரவணப் பொய்கையில் விழும். அப்பாலினை நுகர்ந்து உமதுமுன் உருவம் கொள் வீர்களாக!'' எனச் சாபமிட்டு விமோசனமும் கூறி னார். அவ்வறுவரும் அவ்வாறே சாபவிமோ சனமும் பெற்று முருகனடியார்கள் ஆயினர் என சரவணப்பொய்கையின் சிறப்புக் கூற பெறுகிறது.

சூரனை அழித்த பெருமானுக்குத் தேவேந்தி ரன் தன் நன்றியைத் தெரிவிக்கும் வகையில் தன் மகளான தெய்வயானையைத் திருமணம் புரிவித் தான் என்ற மங்கலமான நிகழ்ச்சியுடன் திரு பரங்கிரித் தலபுராணம் பூர்த்தியாகிறது. முருகன் தெய்வயானை திருமணம் காண வந்த தேவர்கள் அனைவரும் திருப்பரங்கிரியிலே தங்கி விட்டனர். ஆகவே புராணத்தில் தெய்வ வணக் கம்பாடும் போதே எல்லாத் தெய்வங்களையும் வணங்கியுள்ளார் இக்கவி நாயகர். பிரமன் திருமணச் சடங்கு செய்விக்க, மங்கை பங்கனான சிவபெருமான் திருமணம் கண்டுகளிக்க ஆயிரங் கண்களையுடைய தேவராசன் தாரைவார்க்க, தெய்வயானையைக் கைப்பிடித்த முருகனை வணங்குவோம்.

"சுருதிமழை பிலிற்றிடும் சதுமுகனார்
சடங்கியற்றத்: தோகைப்பாகன்
கருதி விழி விருந்தருந்த: கண்ணிறைந்த
மேனியான் கைந்நீர் வார்ப்பத்
தருதி எனக்கையேந்தி பரிதிமதி விளக்கேந்தத்
தந்திமாதை
வருதி எனக்கைப் பிடித்துப் பரங்கிரியின்
மணந்தவனை வணக்கம் செய்வோம்''

என முருகனையே வணங்கி, தன்னிகரில்லா கமலை யுடன் முருகர் மணக்கோலம் எழும்தகைமை நோக்கத் திருமால் வந்தமை கூறி குமரன் மணக் கோலம் புரிந்த அழகை இருவிழிக்கு விருந்தாய் அருந்தும் புத்தமுது எனத் திருமகளைக் குறித்து, வேலவனார் மணக்கோலம் கண்டிருந்த மகிழ்ச்சி யாள் என துர்க்காதேவியையும் குறித்தார்.

சிவபெருமான் மதுரையில் மீனாட்சியம்மை யைத் திருமணம் புரிந்து கொண்டார். அதே மதுரைக்கருகில் முருகப்பெருமானும் தெய்வ யானையைத் திருமணம் செய்து கொண்டார்.

அவ்வாறு திருமணக்கோலம் கொண்ட கலி யாண சுந்தரரும்-கலியாண சுப்ரமணியரும் நம் அனைவரையும் காத்தருள வேண்டுவோமாக!

அந்தணார் சொல் ஆரணம் ஓங்குக!
வந்து நீதியை மன்னவர் மன்னுக!
எந்தை ஆறெழுத்தே பொருளாகுக!
கந்த வேளடியார்கள் களிக்கவே.

வெற்றி வேலுற்ற துணை.
மங்களம்

## பணப்பை உன் கூட வருமா?

கூர்கொண்ட வேலைப் போற்றாமல்
ஏற்றம்கொண் டாடுவீர்காள்

போர்கொண்ட காலன் உமைக்கொண்டு
போம்அன்று பூண்பனவும்

தார்கொண்ட மாதரும் மாளிகை
யும் பணச் சாளிகையும்

ஆர்கொண்டு போவர்ஐ
யோ! கெடுவீர்நும் அறிவின்மையே.

—கந்தர் அலங்காரம்.

# ஞானஒளி வீச வேண்டும்!

## அமரர் கவியோகி சுத்தானந்த பாரதியார்

எளியவர்கள் வயிறார உண்ணவேண்டும்; செல்வர்
இறுமாப்பு நீங்க வேண்டும்
இடரான சாதிமத பேதவினை யறல் வேண்டும்
எல்லாரும் ஓர்குலம் போல்.

வலியவர்கள் கொடுமையற வாழவேண்டும்; பொய்
வழக்கினை ஒழிக்க வேண்டும்.
வறுமையிரு ளடிமையெனும் வார்த்தை யில்லாமலே
வையஞ்செழிக்க வேண்டும்.

மெலியவரு பிணிதுயர் பொறாமைவஞ் சத்தீமை
வேரோடு மாய வேண்டும்.
வீரமிகு கனல்வேண்டும், விடுதலைத் திறன்வேண்டும்
வினைவேள்வி வெல்ல வேண்டும்.

நலியவரும் அசுரபலம் அழியவேண்டும், இந்த
நாட்டில்வின் ணரசு வேண்டும்.
நானிலமெலாம்பரவி நானென் றுளத்திலே
ஞானநட மாடும் அரசே!

வானரசு கூடியே மானிடத் தேவரிம்
மண்மிசை யுலாவ வேண்டும்
வளர்சுத்த யோகமும் போகமும் ஏகமாய்
வாழ்வினை நடத்த வேண்டும்.

ஞானமுங் கல்வியும் நவசக்தி விஞ்ஞான
நலமுடன் பொலிய வேண்டும்.
ஞாலவுயிரின் அமுதநாடியில் ஆனந்த
நடராஜன் ஆட வேண்டும்.

தேனிசை யுடன்வேணு கோபால நாரணன்
சித்தமிசை யிலக வேண்டும்.
செயலவன் செயலாகி ஜீவனில் வெற்றியொளி
திகழின்ப மோங்க வேண்டும்

மோனமலை யூறிவரு முத்தருவி யெனவாக்குன்
மூலமறை பாடவேண்டும்.
முச்சுடர் நிலையத்தின் உச்சத்தில் அரசாளும்
மூலப் பரஞ்சோதியே!

நல்லவர் திருக்கூட்டம் ஓங்கவேண்டும்; உலகில்
ஞானவொளி வீசவேண்டும்,
நாடெல்லாம் கல்விகலை செல்வத் தொழில்வளமை
நாடோறும் ஓங்க வேண்டும்.

பொல்லாத கோள்பொய் பொறாமைநோயுடன்மதப்
போராட்டம் ஒழிய வேண்டும்
பூமியைஇரத்தகள மாக்கிடும் அரக்கர்குலம்
பூண்டோடு மாளவேண்டும்.

எல்லோரும் சரிநிகர் சமானசன் மார்க்கராய்,
இன்புற்று வாழவேண்டும்.
இன்சொலும் ஈகையும் இரக்கமுந் தூய்மையுடன்
இகழ்வாழ்வி லோங்க வேண்டும்.

வெல்லவேண்டும்வாய்மை வீரவிடு தலைவேண்டும்;
விஞ்ஞானம் ஓங்க வேண்டும்
வேதாந்த முக்தியும் சித்தாந்த சக்தியும்
விரவவரு பரம சிவமே!

போக்குவரவற்றபரி பூரணப் பொருளையே
பொருளென்னும் அன்பர் வாழ்க!
பொய்யடிமை யில்லாத மெய்யடியர் வாழ்கவே
புண்ணியத் தொண்டர் வாழ்க!

வாக்கமுதினால் இறைவன் வான்புகழ் இசைக்கின்ற
வரகவி மகான்கள் வாழ்க!
வன்புலனை வென்றுமன மொன்றியித யத்திலே
வளர்தியான யோகர் வாழ்க!

நீக்கமறு சகஜநிலை நின்றஞா னிகள் வாழ்க!
நித்திய சித்தர் வாழ்க!
நிஜதுரிய மலையிலே நிலவுநின் மலர் வாழ்க!
நிருவிகற்பர் வாழ்கவே!

தாக்கறப் பலகோடி யுலகெலாந் தாங்குந்
தயாபரன் கருணை வாழ்க!
தன்னையென் னுள்வைத்த சிவஞான குருவாழ்க
சச்சிதா னந்தம் வாழ்க!

திருக்குறள் வாசகம் திருமந்திரம் கீதை
திருக்குரான் பைபிள் முதலாம்
தெய்வநூல் கற்றதும் திடமான யோகவழி
சென்றனு பவம் கண்டதும்
உருக்கமாய் உன்னையே இசைபாடி நாடோறும்
உண்ணுமுன வழி பட்டதும்
ஓம்சுத்த சத்தியென உள்ளே உயிர்த்ததும்
யோசித்திக் குறளுடன்

பெருக்கமாம் பாரத மகாசக்தி காவியம்
பெற்றதும் உன்னருளினால்
பேசாது பேசியென் பேச்சினைத் தூண்டினாய்
பேசினேன் உன்பெரு மையே!

சுருக்கமாய்க் கூறினேன் சுடர்நீ விளக்குநான்
சுவைநீ சுவைக்கு நாநான்
தூயநல் யோகச் சமாஜத்தின் உயிரான
சுத்த பரமாத்ம குருவே.

---

**அண்மையில் அமரர் ஆன கவியோகி டாக்டர் சுத்தானந்த பாரதியாரின் நீனைவைப் போற்றிடும் வகையில் அவர்தம் கவிதை இங்கு எடுத்து வெளியிடப்படுகிறது.**

# பக்தருள் சிறந்த அதிபத்த நாயனார்

"விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க் கடியேன்"

சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருத்தொண்டர்த்தொகை



**திருமதி உமாராஜன்**, எம்.ஏ.பி.எட்., தமிழாசிரியை, தாம்பரம்.

''கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலினார்'' என்பார்

சேக்கிழார் பெருமான். இறைவனை அன்பு நிறை மனத்துடன் கண்களில் நீர் சொரிய, மெய் நடுக்குற கும்பிடும் இன்பமேயன்றி வீடு பேற்றையும் விரும்பாத மெய் அன்பர்களின் சரிதையே திருத்தொண்டர்ப் புராணம். இப்புராணம் ஆன்மாக்களின் சிந்தையில், அநாதியே தங்கியுள்ள ஆணவமலமாகிய அகஇருளை அகற்ற வல்லது. சைவத்திற்குக் கிடைத்த ஒப்பற்ற ஒளி விளக்கு, அந்த விளக்கிலிருந்து ஒரு சுடரின் சரிதையைக் காண்போம்.

''சோழ நாடு சோறுடைத்து'' என்பார்கள். எங்கும் நீர் வளமும், நிலவளமும் கொண்டது. அதுமட்டுமா? வாணிப வளமும் கொண்டநாடு சோழ நாடு. சோழ நாட்டில் கடற்கரை வளமும், வாணிபவளமும்பொருந்தியநகரம் நாகப்பட்டினம். தேவாரம், திருப்புகழ் பாடல் பெற்ற திருத்தலம். இத்தகைய சிறப்பு வாய்ந்த நாகப்பட்டினத்தை தெய்வப்புலவர்

பொன்னி நாடெனும் கற்பகப்பூங் கொடிமலர்
போல்
நன்மை சான்றது நாகப்பட்டினத் திருநகரம்

என்கிறார். சோழ நாடு ஒரு கற்பகக் கொடி என்றால் அதில் பூத்த மலர் நாகப்பட்டினம் ஆகும்.

இத்தகைய பெருமை பொருந்திய நாகையம் பதியருகே கடலை அடுத்து நுளைப்பாடியிலே பரதவர்கள் வாழ்ந்தார்கள்.

அவர்கள், கடலில் சென்று வலைவீசி அதனால் வரும் மீன்களை விற்று வாழ்க்கை நடத்துபவர்கள். அந்த நுளைப்பாடியிலே பெரிய வலைகளை இழுக்கின்றவர்கள் ஒலியும், மீன் குவியல்களை விலை கூறி விற்கின்ற ஒலியும், அலை கடலின் அதிரொலியும் எங்கும் எதிரொலித்துக் கொண்டே இருக்கும்.

அந்த நுளைப்பாடியிலே பரதவர் குலத்திலே பிறந்தவர் அதிபத்த நாயனார். சிவபெருமானுடையதிருவடியைமறவாதவராய், திருத்தொண்டு புரிந்து வந்தார். பற்றற்ற அன்பினால் பரம்பொருளைத் தரிசித்துப் பெருமை கண்டவர். இறைவன் மீது அதிகமான பக்தி பூண்டமையால் அதிபத்தர் என்ற பெயரைப் பெற்றார்.

அலைகடலின் மேல் சென்று மீன் பிடிக்கும் பரதவக் குலத் தலைவராய் விளங்கினார் அதிபத்தர். கடலின் அலைகளிலும், கடல் மணற் பரப்பிலும் எங்கும் ஈசனையே கண்டு அன்பு மேலிட வணங்கி வந்தார்.

பரதவர்கள் வலையில்படும் மீன் குவியல்களை தம் தலைவரான அதிபத்தர் முன்வைப்பர். அந்த மீன் குவியல்களில் சிறந்த ஒரு மீனைத் தம் ஈசர்க்கென்று நினைத்து அன்புடன் அதனை கடலில் விட்டு விடுவார். இதனைத் தம் நித்திய நியமாகக் கொண்டார் அதிபத்தர்.

''முட்டில் மீன்கொலைத் தொழில்வளத்தவர்
வலைமுகந்து
பட்டமீன்களில் ஒருதலை மீன்படுந் தோறும்
நட்டமாடிய நம்பருக் கெனநளிர் முந்நீர்
விட்டுவந்தனர் விடாத அன்புடனென்றும்
விருப்பால்''

ஒரு சில நாட்களில் ஒரே ஒரு மீன் மட்டுமே வலையில் அகப்படும். அதனை, ஏக நாயகர் தம் கழற்கென விடும் இயல்பால் ஈசர்க்கென்றேஅளித்து விடுவார். இவருடைய அன்பின் தன்மையை இறைவர் உணர்ந்தார். அதிபத்தரின் பெருமையை இவ்வுலகம் உணரவேண்டும் என எண்ணினார். இறைவன் கருணையால் அதிபத்தர் சோதனைக்குள்ளானார். அடியவர்களைச் சோதிப்பதும், சோதனைகட்கு உட்படுத்துவதும் இறைவனின் திருவிளையாடல் அல்லவா?

இறைவனின் திருவுளப்படி அநேக நாட்கள் ஒரே ஒரு மீன் மட்டுமே வலையில் வீழ்ந்தது. அதனையும் வழக்கம் போல் மான் மறி கரத்தவர்க்கே என்று கடலில் விட்டு வந்தார். இதனால் அவருடைய பெருஞ்செல்வம் கரைந்தது. அதிபத்தர் மிகவும் வறியவரானார்.

அதிபத்தரும், அவருடைய சுற்றத்தாரும் வறுமையில் உழன்றனர். பல நாள் பட்டினி இருந்தனர். இவ்வாறு பட்டினி கிடந்து தம் மேனி தளர்வுற்றாலும் இறைவனை வணங்கும் நியதியிலிருந்து சிறிதும் வழுவாது தன் கடனை ஆற்றி வந்தார். இவ்வாறு அடியார் பசித்திருக்க இறைவன் அவருடைய அன்பென்னும் அமுதினை உண்டார். இதனைச் சேக்கிழார் பெருமான்

''சாலநாள்கள் இப்படிவரத் தாம் உணவயர்த்துக்
கோல மேனியுந் தளரவுந் தந்தொழில்
குறையாச்
சீலமே தலைநின்றவர் தம்திறம் தெரிந்தே
ஆலம்உண்டவர் தொண்டர் அன்பெனும்
அமுதுண்பார்''

தொண்டரின் பெருமையை உலகிற்கு அறிவிக்கும் நாள் வந்தது. என்றும் போல் பரதவர் வலையெடுத்து அலைகடல் மேல் மீன் பிடிக்கச் சென்றனர். அன்று அந்த ஒரு மீனும்கூட வலையில் கிடைக்கவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக கனக நற்சுடர் நவமணிகளால் ஆகிய ஒரு விலை மதிப்பில்லா மீன், அந்த மீனிற்கு விலையாக இந்த உலகத்தையே கொடுத்தாலும் தகும், அத்தகைய பெருமை பொருந்திய மீன் வலையில் அகப்பட்டது.

பரதவர்கள் மிக்க மகிழ்வோடு பேரொளியை வீசி நின்ற அந்த மரகத மீனை தம் தலைவர் பால் சேர்த்தனர் அந்த மீனை விற்றால் பல தலைமுறைகள் தாமும் தம் சுற்றமும் சீரும் சிறப்புமாக வாழலாம் என்று அதிபத்தருக்குத் தெரியும்..

இருப்பினும் இறைவர் பால் கொண்ட மாறாத அன்பினால். 'இன்று கிடைத்த மீன் இது ஒன்றே. ஆகவே இது நம் ஈசனார்க்கே' எனக் கடலிலே சேர்த்தார் பற்றற்றவரும், பரம பக்தியாளருமான அதிபத்தர்.

"ஏறுசீர்த்தொண்டர்
பொன்திரட் சுடர் நவமணி பொலிந்த மீன் உறுப்
பால்
ஒன்றும் மற்றிது என்னை ஆளுடையவர்க்காகும்
சென்று பொற்கழர் சேர்'கெனத் திரையொடும்
திரித்தார்''

என்கிறார் சேக்கிழார்.

பொருள் மீது பற்றில்லாதவர் உண்டோ? அதிலும் வறுமையில் உழன்று கொண்டிருக்கும் மானிடனுக்கு பொருள் கிடைத்தால், இறைவன் தமக்களித்த புதையல் என்று மனமகிழ்ந்துஎடுத்துக் கொள்வதுதான் மனித இயல்பு.

---

## கடவுளின் அரசே நடக்கிறது

**நீ உன்னை உண்மையிலேயே கடவுளிடம் ஒப்படைத்து விட்டால் உனக்கு எதை எப்போது செய்ய வேண்டும் என்பதை அவரே பொறுப்பேற்றுக் கவனித்துக் கொள்வார். கடவுள் ராஜ்யம்தான் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, தலைக்கு மிஞ்சிய ஆபத்து ஒன்றுமே உனக்கு ஏற்பட வழியில்லை.**

—இராமகிருஷ்ணப் பரமஹம்சர்

---

ஆனால் அதிபத்தர் அவ்வாறு எண்ணவில்லை. இறைவனுக்குதாம் செய்யும் நித்தியக்கடனிலிருந்து வழுவாது காத்த அந்த இறைவனுக்கு நன்றி கூறினார். தினமும் சாதாரண மீனையே இறைவனுக்கு அளித்த அதிபத்தர் பேரொளியைத் தரும் கனக மணி மீன் கிடைத்தபோது பெரிதும் மகிழ்ந்தார். தன் இறைவனுக்கு உயர்ந்த பொருளைக் காணிக்கை தருவதில் அளப்பரிய உவகை கொண்டார்.

யார் மீது பெரு மதிப்பும், அன்பும் அளவிடாது வைத்துள்ளோமோ! அவர்களுக்காக எதனையும் அளிக்கத் தயங்க மாட்டோம். ஆனால் அதிபத்தர் எல்லாவற்றையும் மிஞ்சி விட்டார்.. ஈசன் மீது கொண்டிருந்த எல்லையில்லா அன்பின் விளைவால் பற்றற்ற பற்றாளராக இருந்தார்.

இறையவர் இதன் பின்னும் தாமதிப்பாரோ!

''இகலில் மெய்த்திருத் தொண்டர் முன் இறைவர்
தாம் விடை மேல்
முகில் விசும்பிடை அணைந்தனர் பொழிந்தனர்
முகைப் பூ''

ஈசன் விடைமேல் எழுந்தருளியபோது தேவர்கள் பூமாரி பொழிந்தனர். பஞ்சநாதம் ஆர்ப்பரித்தது. இதைக்கண்ட அதிபத்தருக்கு வேறு என்ன வேண்டும்? மெய்நடுக்குற்று கண்கள் நீரைச் சொரிய இறைவன் கருணையை எண்ணிக் கரங்களைச்சிரமிசை குவித்து வணங்கி நின்றார்.

மெய்யன்பு பூண்டொழுகிய அதிபத்தரை இறைவர் தம் நிழலில் இருத்திக் கொண்டார் என்பதை சொல்லவும் வேண்டுமோ?

இத்தகைய தொண்டர் தம் பெருமையை கேட்பதும் கூறுவதும் இம்மைக்கும் மறுமைக்கும் நமக்கு பெரும் புண்ணியம் தரும் சாதனமே ஆகும்.

தம்மறம்புரி மரபினில் தகும் பெருந்தொண்டு
மெய்மையேபுரி அதிபத்தர் விளங்குதாள்
வணங்கி
என்றென்றும் போற்றி நிற்போமாக.


இந்திரப்பிரத்தத்தில் தருமரின் நீதி தவராத ஆட்சி நடைபெற்றுக் கொண்டு வருகிறது ஒருநாள்.... "ஆ! இந்த அநியாயத்தைக் கேட்பார் இல்லையா? என் ஆநிரைகளை வேடுவர்கள் கவர்ந்து செல்கிறார்களே" என்று ஒரு மறையவன் அரண்மனை வாயிலில் வந்து நின்று புலம்புகிறான்.
மறையவரே! கவலையை விடுங்கள் நான் உங்கள் ஆநிரையை மீட்டுத் தருகிறேன்!
கதை வடிவம்: செவ்வேள்
சித்திர பாரதம்
படம் MN.ராஜா
வில்லெடுக்கச் சென்ற அர்ச்சுனன் சோலையில், தருமபுத்திரருடன் அமர்ந்திருக்கும் திரௌபதியின் சிறிய பாதங்களைக் காண நேரிடுகிறது.
வேடுவர்களுடன் போரிட்டு ஆநிரைகளை மீட்டு மறையவரிடம் ஒப்புவிக்கும் அர்ச்சுனன் திரௌபதியைக் கண்டதற்குப் பரிகாரமாக உடன் தீர்த்த யாத்திரை புறப்படுவதெனத் தீர்மானிக்கிறான்.
தீர்த்த யாத்திரைக்குப் பொருந்த வைதிக வேடம் பூண்டு கொள்கிறான் அர்ச்சுனன்.
புனித நீராடி வருகிறேன் அண்ணா
சீக்கிரமே வந்துவிடு அர்ச்சுனா
கங்கையில் நீராட வந்த நாகக்கன்னிகை உலூபி, அர்ச்சுனனைக் கண்டு ஆசை கொண்டு அவனை நாகலோகத்திற்கு...
அழைத்துச் செல்கிறாள்


நாகலோகத்தில் உலூபியை மணந்து உல்லாசமாக இருக்கும் அர்ச்சுனனுக்கு தியாக சீலனான இராவான் புதல்வனாகப் பிறக்கிறான்
நான் புறப்படுகிறேன். மகனைப் பத்திரமாக வளர்த்து வா
அப்படியே ஆகட்டும் சுவாமி
திருவேங்கட மலை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம், திருவரங்கம் முதலான பல திருத்தலங்களைத் தரிசித்து வழிபடும் அர்ச்சுனன் மதுரைக்கு வருகிறான்.
தோழிகளுடன் சோலைக்குப் பூக்கொய்ய வரும் இளவரசி சித்திராங்கதையும் அர்ச்சுனனும் ஒருவரையொருவர் கண்டு காதல் கொள்கின்றனர்.
தன் மகளின் மனம் கவர்ந்த மறையவன் அர்ச்சுனன் என அறிந்து மனம் மகிழும் சித்திரவாகனப் பாண்டியன் அர்ச்சுனன் - சித்திராங்கதை திருமணத்தை சிறப்புற நடத்திவைக்கிறான்
சித்திராங்கதையிடம் பப்புருவாகனை மகனாகப் பெறும் அர்ச்சுனன் தன் தீர்த்த யாத்திரையை மேலும் தொடர்ந்து இராமேஸ்வரம் வருகிறான். சேது தீர்த்தம் ஆடிக் கரைக்கு வரும் அர்ச்சுனன் இராமநாமத்தை ஜெபித்தபடி அங்கே தியானத்திலிருக்கும் ஒரு குரங்கைக் காண்கிறான்.

# கந்தவேல் கருணை



## [28]

டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார்

வீரவாகுதேவர் சிறைக் கூடத்தினின்று ஆகாய வழியாகப் புறப்பட்டார். சூரபன்மனின் அரண்மனைக் கோபுரத்தைக் கண்டு அதன் அழகை வியந்தார். கோபுர வாயிலில் உக்கிரன் மாயூரன் முதலிய அரக்க வீரர்களும், நால்வகைச் சேனைகளும் காவல் காத்துக் கொண்டிருந்தனர். ஆகவே தான் வீரவாகு தேவர் நிலத்தில் நடந்து செல்லாமல் வான வழியே சென்று அவ்வரண்மனையைக் கண்டார். அது நவரத்தின மயமாக ஜொலித்தது. ராஜ சபையில் இரத்தினம், முத்து, பவளம், கோமேதகம், வைரம் இவற்றால் இழைத்து அணி செய்யப்பட்ட சிங்காதனத்தில் வீற்றிருந்தான் சூரபன்மன், அவனுக்கு மேனகை, திலோத்தமை, ஊர்வசி முதலிய தேவமாதர்கள் ஆலவட்டம் வீசிக்கொண்டிருந்தார்கள். சந்திரனும் சூரியனும் இரண்டு பக்கங்களிலும் குடைபிடித்து நின்றார்கள். அரம்பையர் நடனமாடிக் கொண்டிருந்தனர். வித்தியாதரரும், கின்னரரும் வீணைவாசித்துக் கொண்டிருந்தனர். துதி பாடகர்கள் பிரம்பை ஏந்தித் துதித்தனர். சூரபன்மனுடைய தலையிலே இரத்தின முடி ஒளிர்ந்தது. காதுகளில் குண்டலங்கள் ஆடின. உடலில் கலவைச் சாந்தின் மணம் கமழ்ந்து கொண்டிருந்தது. இடுப்பிலே பீதாம்பரம் அணிந்திருந்தான். அதில் உதரபந்தம் என்னும் அணியும் இருந்தது. மழைச் சூல்கொண்ட பெரிய கருமேகம் ஒன்று சந்தியா காலத்தின் நானாவிதவர்ண விசித்திரங்களால் தன்னை அலங்கரித்துக் கொண்டிருப்பதுபோல் சூரபன்மன் வீற்றிருந்தான்.

சூரமன்மனுடைய அவையின் சிறப்பையும், அவன் பெருமையையும் கண்ட வீரவாகுத் தேவருக்கு அவனிடம் கௌரவ புத்தியும், இரக்கமும் ஏற்பட்டன. இந்த போக வாழ்வையெல்லாம் பரமேசுவரனிடமிருந்து அல்லவா இவன் தவமியற்றிப் பெற்றிருக்கிறான்! பாவம் தேவர்களைச் சிறை வைத்த ஒரு குற்றத்துக்காக இவ்வளவும் தொலையப்போகிறதே' என்று பரிதாபப்பட்டார். 'தூது செல்லும் நான் சூரபன்மனைத் திருத்த முயல்வேன். என்னுடைய சொல்லால் அவன் திருந்தவில்லையெனில் முருகப் பெருமானின் வேலினால் தான் திருந்துவான்' என்று எண்ணினார்.

புத்தியில்லாத தூக்கணாங்குருவி யொன்று மரத்தில் கூடுகட்டி முட்டையிட்டது. அது முட்டையிடுவது ஓர் இடம்; குஞ்சு பொரிப்பது மற்றோரிடம்தான். குஞ்சு பொரிக்கும் இடத்துக்கு முட்டையை எடுத்துச் சென்றது குருவி. இரவில் வெளிச்சம் வேண்டும் என்பதற்காகக் கொஞ்சம் களிமண் எடுத்து வந்து, ஒரு மின் மினிப்பூச்சியைப் பிடித்து அந்த மண்ணில் குத்தி வைப்பது தூக்கணாங்குருவிகளின் வழக்கம். ஆனால் இந்தப் புத்தியில்லாத தூக்கணாங்குருவி மின்மினிப் பூச்சியென்று நினைத்துக் கொள்ளியுடனிருந்த ஒரு சுள்ளியைக் கொண்டு வந்ததாம். அதைக் கூட்டிற்குள் கொண்டு போய் வைத்தால் என்னவாகும்?


மெய்சோதி தங்கு சிறுகொள்ளி தன்னை
விரகின்மை கொண்ட ஒருசார்
கச்சோதம் என்று கருதிக் குடம்பை
தனில் உய்த்து மாண்ட கதைபோல்
அச்சோ என்பல் இமையோரை ஈண்டு
சிறைவைத்த பாவம் அதனால்
இச்சூர பன்மன் முடிவெய்தும் நாளை
இதனுக்கோர் ஐயம் இலையே.

சூரபன்மன் வீரமகேந்திரபுரியாகிய தன் குருவிக் கூட்டில் மின்மினி என்று எண்ணி தேவர்களாகிய தீக்கங்குகளை வைத்திருக்கிறான். தீயில் வெந்து மாளவிருக்கிறானே' என்று அந்தப் பகைவனிடம் அருள் கூர்ந்தார் கருணை வடிவான முருகப்பெருமானின் தூதர்.

சூரபன்மன் உயர்ந்த சிம்மாதனத்தில் கால் மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான். 'மேரு மலையை வில்லாகக் கொண்டுள்ள சிவபெருமானின் புதல்வரும் வீரவேலைத் தாங்கும் தீரருமான முருகப் பெருமானுடைய தூதனாகச் செல்லும் நான் சூரபன்மனுடைய சபா மண்டபத்தில் அவனுக்குத் தாழ்வாக உட்கார்ந்தால் முருகப் பெருமானுக்கு அல்லவா அவமானம் என்று எண்ணினார் வீரவாகுதேவர்.

''ஒற்றை மேருவில் உடையதோர் பரம்பொருள் உதவும
கொற்ற வேலுடைப் புங்கவன் தூதெனக் கூறி
இற்றை இப்பகல் அவுணர்கோன் கீழியான் எளிவாய்
நிற்றல் எம்பிரான் பெருமையின் இழிபென
நினைந்தான்.''

'கந்த நாயகா' என்று தியானித்தார் வீரவாகுதேவர். சிவபெருமான் திருவருளால் திருஞானசம்பந்தருக்கு முத்துப் பந்தரும், முத்துச் சிவிகையும் வந்தன அல்லவா? அதுபோல ஆயிரங் கோடி சூரியன் ஒளி வீசுவது போன்று ஜகஜ்ஜோதியாக ஜொலிக்கும் பொன்மணிச் சிங்காதனம்ஒன்று முருகப் பெருமான் திருவருளால் அந்தச் சபையில் அக்கணமே தோன்றியது.



''இனைய துன்னியே அறுமுகப் பண்ணவன்
இருதாள்
நினையும் எல்லையில் ஆங்கவன் அருளினால்
நிசியில்
திகைரத் தொகை ஆயிர கோடி சேர்ந் தென்னக்
கனக மா மணித் தவிசொன்று போந்தது கடிதின்.''

''நித்திலப்படு பந்தருஞ் சிவிகையும் நெறியே
முத்தமிழ்க்கொரு தலைவனாம் மதலைக்கு
முதல்வன்
உய்த்த வாறெனக் குமரவேள் வீரனுக்குதவ
அத்தலைப்பட வந்தது மடங்கலேற் றனைய.''

வீரவாகு தேவர் அதில் அமர்ந்தார். சூர பன்மன் அவரைக் கண்டான். அவனுடைய உள்ளுணர்ச்சியே அவர் தேவர்களின் சார்பில் வந்திருப்பவர் என்று உணர்த்தியது.

வீரவாகுதேவரை ஏறிட்டு நோக்கிய சூர பன்மன் பெருங் கோபங்கொண்டான்; பற்களைக் கடித்தான். ''நீ வரவழைத்தாயே பொன்மணிச் சிம்மாதனம்; அந்த வேலையை எங்கள் வீட்டுப் பெண்கள் செய்வார்கள். **எங்கள் ஊரில் கர்ப்பத்தி**லிருக்கின்ற ஒரு மாதக் குழந்தையும் இந்த வித்தையைச் செய்யும். நீ செய்தது என்ன பிரமாதமான செப்படி வித்தை! உன் உயிர்போவதற்கு முன்னே நீ யார் என்பதைச் சொல்லிவிடு'' என்றான்.

"உரைசெய் இந்நகர் மகளிரும் செய்வர், ஊன்
முற்றாக்
கருவின் உள்ளுறு குழவியும் செய்திடும் கருத்தில்
வரைகளும் செயும் மாக்களும் செய்யும் மற்று
அதனால்
அரியது அன்றரோ பேதைநீ புரிந்திடும் ஆடல்''

சூரபன்மன் தொடர்ந்து கூறுவான்:

"வாசவன் கரந்தோடினன் பிறரிது மதியார்
கேசவன் இதுநினைகிலன் மறைகளின் கிழவோன்
ஆசி கூறியேதிரிந்திடும் அவர்க்கெலாம் முதலாம்
ஈசன் என்னிடை வருகிலன் யாரைநீ என்றான்.''

தேவேந்திரன் மறைந்து ஓடிவிட்டான்; மற்றவர்கள் இதனை மனதிலும் நினைக்க மாட்டார்கள். நாராயணன் இப்படிச் செய்யத் துணியமாட்டான்; பிரமதேவன் என்னைச் சதா வாழ்த்துரை கூறித் திரிகின்றான். அவர்க்கெல்லாம் தலைவராகிய சிவபெருமான் அடியவன் என்று என்பால் வர மாட்டார்.

அப்படியிருக்க என் அரண்மனையில் பிரவேசித்துள்ள நீ யார்?'' என்று கேட்டான் சூரபன்மன்.

வீரவாகு தேவர், சூரபன்மனைப் பார்த்து, ''மாயங்களைச் செய்து உழலும் வலியில்லார் போன்று என்னை எண்ணாதே.''

''புரந்தரன் குறை அயன்முதல் அமரர் தம் புன்மை
வருந்தும் வானவர் சிறையெலாம் நீக்கி
மற்றவர்தம்
திருந்து தொல்லிறை உதவுவான் செந்திமாநகர்வந்
திருந்த ஆதியம் பண்ணவன் அடியனேன் யானே''

தேவேந்திரன் குறை தீரும் பொருட்டும் தேவர்கள் சிறைமீளும் பொருட்டும் திருச்செந்தூர் வந்திருக்கின்ற ஆதிப்பரம்பொருளாக இருக்கின்றவரின் அடியவன் நான்'' என்று கூறினார் வீரவாகுதேவர்.

(முருகவேளைப் போலவே வீரவாகு தேவரும் சிவகுமாரர்தான். 'சிவபெருமான் என்னிடம் பகைகொண்டு இங்கு வரமாட்டார்' என்று கூறிய சூரனிடம் வீரவாகு தான் சிவ குமாரனே எனக் கூறி மரியாதை பெற்றிருக்கலாம்; அல்லது தம்மை முருகனின் தம்பி என்று பெருமையாகச் சொல்லியிருக்கலாம். ஆயினும் பணிவின் உருவாக அண்ணலின் பணியில் வந்த வீரவாகு அவ்விதம் சொல்லவில்லை. 'ஆறுமுகனின் அடியேன்' என்றே சொல்கிறார்)

சூரபன்மன் ஆச்சரியமடைந்தான். 'முருகனை பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். தேவர்களுக்கு உதவி புரிய அவன் முயல்வதை அறிவேன். என் அருமைச் சோதரன் தாரகனை அவன் வதம் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. எனினும் அவன் சின்னஞ்சிறு பாலகன், பால்மணம் மாறாதவன் என்பதால் அவன்மீது போருக்குச் சென்றால் மாறாத பழி வருமே என்று விட்டுவிட்டேன். நீ அவனுக்குத் தூதனா? வேண்டுமானால் அந்தக் குழந்தையே என்னிடம் நேராக வந்திருக்கலாம். சரி வந்த விஷயம் என்ன? சொல்'' என்று கேட்டான் சூரபன்மன்.

சூரனின் பெருமையைக் கண்டு அவனது தவத்தை எண்ணி மகிழ்ந்த வீரவாகுவுக்கு அவனுடைய வாழ்வு முடியும் தருணம் வந்ததே என்று கருணை ஏற்பட்டது. கருணை ஏற்பட்டால் உள்ளத்தில் சகோதர பாவம் ஏற்படும். அவ்வாறே வீரவாகு தேவருக்கும் ஏற்பட்டது. உண்மையிலேயே உலகத்து உயிரினங்கள் அனைத்தும் உறவு பூண்டவையே.

''தாதை யாகியோன் காசிபன் ஆங்கவன் தனயன்
ஆத லால்உனக் கமரரைச் சிறைசெய்வ தறனோ
வேத மார்க்கமும் பிழைத்தனை சிறுபொருள்
விழைந்தாய்
நீதி யால்உல களிப்பதே அரசர்தம் நெறியே.''

உயிரினங்கள் அத்தனை பேருக்கும் காசிபர் தான் பிதா. காசிபருக்குப் பதின்மூன்றுமனைவிகள். அவர்களில் அதிதியின் வயிற்றிலே முப்பத்து முக்கோடி தேவர்களும் பிறந்தனர்.

''சூரபன்மனே! உனக்குத் தந்தை காசிபர். தேவர்களும் அவருடைய புதல்வர்கள்தான். எனவே, தேவர்கள் உனக்கு மூத்த சகோதரர்கள். அவர்களை நீ சிறை வைப்பது நியாயமா? தர்மமா? நீ வேத நெறியை விட்டுவிட்டாய். செம்மையான நெறியை நீ கைக்கொள்ளவில்லை. அற்பப்

**தன் மனைவி அவர்கள் வீட்டில் எல்லோரையும் துறந்து வந்தாளே என்று அன்பு காட்ட வேண்டும். துறவியும் புதுப்பெண்ணும் ஒன்று.**

—டாக்டர் திருமுருக
**கிருபானந்த வாரியார்**

பதவியைப் பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கிறாய். மன்னனுக்கு என்று நீதி நெறி உண்டு. அந்த நெறியில் நிற்பதுதான் அரசனுக்கு அழகு, அந்த ராஜ தர்மத்தை நீ மேற்கொள்ள வேண்டாமா? குற்றமற்றவர்களைச் சிறையில் வைத்திருக்கலாமா? முன் காலத்தில் அசுரர்களுக்குத் தேவர்கள் துன்பம் செய்திருக்கிறார்கள் என்பதற்குப் பிரதியாக அவர்களைச் சிறை வைப்பதாயிருந்தாலும் அதற்கும் ஓர் எல்லை இருக்க வேண்டாமா?

பரம சாதுக்களுக்கும், மிகவும் உத்தமமான பெரியவர்களுக்கும் எவன் ஒருவன் தீங்கு செய்கிறானோ, மகான்களுக்கு எவன் கெடுதல் எண்ணுகிறானோ அவன் தன் அழிவுக்கு மட்டுமின்றித் தன் சுற்றத்தாருடைய அழிவுக்கும் காரணமாவான். அதுமட்டுமல்ல; பிறவி எழுந்தொறும் எழுந்தொறும் அந்தப் பாபம் அவனைத் தொடரும்.

''செம்மை நீங்கியே கொலைகள வியன்றுமே
லுள்ள
செம்மை யாளரைச் சீறியே அணங்குசெய் தீயோர்
தம்மில் ஆற்றரும் பழிசுமந் தொல்லையில் தமரோ
டிம்மைவிடுவர் எழுமையுந் துயரினோ டிருப்பார்''

சந்தியந்தவறி, கொலைகளவுகள் புரிந்து ''சூரபன்மா! நீ எத்தனை சாதுக்களுக்கும், மகரிசிகளுக்கும் தீங்கு செய்தாய்? நீ இப்போதேனும் திருந்தினால் முருகன் அருள்பெற்று உய்வாய். திருந்தாவிடில் கூண்டோடு அழிந்து விடுவாய். உனக்கு அறிவுரை சொல்ல யாரும் இல்லை. நான் சொல்கிற நல்லுரையையேனும் மனத்தில் வாங்கிக்கொள். போனதெல்லாம் போகட்டும். நீ இப்பொழுதேனும் தேவர்களைச் சிறையிலிருந்து விட்டு உய்ய வேண்டும் என்பதற்காக உனக்கு நீதி நெறியை இதமாகச் சொல்லச் சொன்னார் முருகப் பெருமான். இன்னமும் நீ பிடிவாதமாக இருந்தால் முருகப் பெருமான் உன்னைக் குலத்தோடு அழித்து விடுவார். இது உறுதி'' என்று வீரவாகு தேவர் கூறினார்.

கெடுதல் இல்லதோர் அமரர்கள் சிறையிடைக்
கிடப்ப
அடுதல் செய்தனை பல்லுகம் அவர்தமை இன்னே
விடுதல் உய்வகை ஆளுமால் மறுத்தியேல்விரைந்து
படுத லேநினக் குறுதியாம் முறையும்அப் பரிசே.'

—தொடரும்



# மதுரை மீனாட்சி

**புலவர் ச. சோமசுந்தரம்,** எம்.ஏ.,பி.எட்.,

*''அம்மையே அம்பிகையே போற்றி போற்றி*

*அங்கயற்கண் அம்மையே போற்றி போற்றி''*

**முன்னுரை:**

அன்னை பராசக்தி, காஞ்சியிலே காமாட்சியாகவும், காசியிலே விசாலாட்சியாகவும், கவின் மிகு மதுரையிலே மீனாட்சியாகவும் கனிவுறக் காட்சித் தந்து காசினியைக் காத்து அருள்கின்றாள். எனினும் அன்னை செங்கோல் ஏந்தி அரசோச்சும் அற்புத புண்ணிய பூமியாக விளங்குவதால் மதுரை அறுபத்து நான்கு பீடங்களுள் முதன்மையான உயர்ந்த பீடமாக, சியாமளா பீடமாக, துவாத சாந்த தலமாகப் போற்றப்படுகிறது.

**மதுரை:**

சிவபெருமான் தம்திருமுடியிலுள்ள பிறையின் அமுதமாகிய மதுரத்தை இத்திருக்கோயில் விமானங்களிலும் கோபுரங்களிலும் தெளித்தார் என்ற சிறப்புப் பற்றியே மதுரை என்ற திருப் பெயர் ஏற்பட்டது.

**ஆலவாய்**

நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்

''ஞாலம் நின்புகழே மிகவேண்டும்தென்
ஆல வாயி லுறையும் எம் ஆதியே''-எனவும்

''அண்ணல் ஆலவாய்-நண்ணினால் தனை
எண்ணியே தொழத் திண்ணம் இன்பமே''
எனவும் பாடுகின்றார்.

ஆலமரத்தை முகப்பில் எல்லையாகக் கொண்ட காட்டில் இறைவன் ஆணைப்படி ஆலகால நாகமொன்று, தன் தலையும் வாலும் கூடுமாறு வளைத்துக் காட்டிய இடத்திலே இத் திருக்கோயில் அமைந்ததால் இம்மதுரை மாநகரை ஆலவாய் என்றே பாடுகின்றார்.

**கூடல்:**

கூடல் என்றால் ஒன்று சேர்தல் என்பது பொருள். சங்கம் வைத்துத் தங்கத் தமிழ் வளர்த்து அங்குப் புலவர்கள் உவப்ப தலை கூடியதால் கூடலாயிற்று.

கடற்கோள்களால் சிதறுண்ட பாண்டியர்களின் பல்வளங்களும் மீண்டும் கூடியதால் கூடலாயிற்று.

வருணன் கடலை யேவிப்பெரும்புகழ் மதுரையை யழிக்கக் கருதினான். சிவபெருமானோ நான்கு மேகங்களை அழைத்து அந்தக் கடல்நீரைக் குடிக்குமாறு செய்ய, சினங்கொண்ட வருணன் மீண்டும் பெருமழை பெய்யச் செய்தான். அப்போது அந்த நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகி, மழையினின்று காத்தன. எனவே நான்மாடக்கூடல் என்ற பெயரும் உண்டாயிற்று.

''உலகமொரு நிறையாத் தானோர் நிறையாப்
புலவர் துலாக்கோலால் தூக்க-உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர்''-என்பது பரிபாடல்.

**நகர அமைப்பு:** காஞ்சி திருவாரூர், திருநெல்வேலி, இராமேஸ்வரம் போன்றப் பெருந்தலங்களில் மதிற்சுவர்களை அடுத்துத் தேரோடும் வீதி ஒன்று மட்டுமே உள்ளது.

ஆனால் இத்திருக்கோயிலுக்குள்ளேயே ஆடிவீதி என்ற பெரிய வீதியுள்ளது. வெளிப் புறத்தேயும் சித்திரை வீதிகள் 4, ஆவணி மூல வீதிகள் 4, மாசி வீதிகள் 5, வெளிவீதிகள் 4 ஆக 16 வீதிகளும் வளைந்தும் நெளிந்தும் அமையாமல் நேராக சீராக நூல்பிடித்துக் கட்டப்பட்டது போலக் காட்சித் தருகின்றன. கோயிலை நடு நாயகமாக வைத்துச் சுற்றிலும் சிறிய பெரிய சதுரமாக வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

அதனால்தான் மதுரை மாநகர் மட்டவிழ் தாமரையாக உருவகம் செய்யப்பட்டுள்ளது.

மலரின் மையப்பகுதி மன்னனின் மங்கல மனையாகவும், மலரிலுள்ள மகரந்த தூள்கள் மாநகர் வாழ் மக்களாகவும், ஆலவாய் அண்ணலின் ஆலயம் அரும்பொகுட்டாகவும், எண்டிசை தெருக்கள் தண்டாமரையின் திருவிதழ்களாகவும் பரிபாடல் என்னும் சங்கப்பாடலில் உருவகம் செய்யப்பட்டுள்ளது.

''மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்பூ
வொடு, புரையும் சீரும் பூவின்
இதழகத்து அனையதெருவும் இதழகத்து
அரும்பொகுட்டு அனைத்தே அண்ணல் கோயில்''
—பரிபாடல்

**பொற்றாமரைக் குளம்** :—தெய்வத் திருப் பாதங்களைத் திருவடித்தாமரை என்பர். இத் தகைய புனிதமிகு பொற்றாமரைகள் மலரும் பொற்றாமரைக் குளமொன்று இத்திருக்கோயிலினுள் இருக்கிறது.

விருத்திராசூரன் என்ற அசுரனைக் கொன்றதால் இந்திரனைப் பிரமஹத்தி பாவம் பிடித்துக் கொண்டது. விண்ணிலும் மண்ணிலும் அவனைப் படாது பாடுபடுத்தியது. புண்ணிய தீர்த்தங்கள் பல மூழ்கியும் பயன் ஏற்படவில்லை.

ஒரு நாள் பாண்டி நாட்டுக் கடம்ப வனத்தின் ஓரமாகப் போய்க் கொண்டிருந்தபோது அக் கொலைபாவம் தன்னை விட்டு நீங்கியதாக உணர்ந்தான். தேடிப் பார்த்தபோது ஒரு குளமும் அதன் கரையில் கடம்ப மரநிழலில் ஒரு சிவலிங்கமும் இருப்பதைக் கண்டான்.

எனவே பொற்றாமரைகளை எடுத்து அருச்சனை செய்தான். அந்தச் சிவலிங்கத்திற்கு ஒரு அழகான விமானமும் கட்டி முடித்துத் தெய்வலோகம் திரும்பினான். அந்தச் சிவலிங்கமே மதுரை சொக்கலிங்கமாக விளங்கும் மூலவராவர்.

**தமிழ் அரங்கேற்றம்** :— தமிழ் புலவர்கள் கவிதைகளை இயற்றி, கவிஞர்கள் முன்னிலையில் விளக்கியபின் பொற்றாமரைக் குளத்தில் இடுவர். தாமரைத் தாங்கிக்கொண்டால் நல்ல நூல், தண்ணீரில் மூழ்கினால் சங்கப் பலகை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கருதப்பட்டது.

இக்குளக்கரையில்தான் திருக்குறள் அரங்கேற்றம் நடைபெற்றது. இதன் நினைவாக குளத்தின் தென் புறத்தில் 1330 அருங்குறளும் வெண்சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டு உள்ளது. மேலும் தேவார திருவாசகப பதிகங்களும், சிவ ஞான போதப் பாடல்களும் அபிராமி அந்தாதிப் பாடல்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

''தவளத் தாமரை தாதார்கோயில்
அவளைப் போற்றுதும் அருந்தமிழ்
குறித்தே''—

என்ற பாடல் எழுநதது.

**திருக்கோயில் சிறப்பு** :—கிழக்கு மேற்காக 920 அடி, தெற்கு வடக்காக 740 அடி நீளமுள்ள மதிற்சுவர்களைக் கொண்டது. 15 ஏக்கர் நிலப் பரப்புள்ளது. திருக்கோயிலை வலம் வந்தால் ஒரு கிலோ மீட்டர் தொலைவு நடந்ததற்குச் சமம், படிமக்கலை கட்டிடக்கலை முதலிய ஆயகலைகள் அறுபத்தி நான்கையும் வளர்த்து வந்திருக்கிறது.

சமுதாய நல மையமாய், புலவர் கூடும் மேடையாய், வண்ணக்களஞ்சியமாய், அமுது படைக்கும் அறச்சாலையாய், ஓவியக் கருவூலமாய் சிற்பக்கூடமாய், இசைக்கலையின் இருப்பிடமாய் விளங்கி வந்திருக்கிறது. 33,000 சிற்பங்களை ஒரே தொகுதியாக இவ்வாலயத்தில் காணலாம். கட்டிடக் கலைஞர்களின் கைவண்மைக்கு எடுத்துக் காட்டாகவும் சுதை வேலைபாட்டிற்கு எடுத்துக் காட்டாகவும் உள்ளன. கல்லெல்லாம் கவிபாடும், கதை சொல்லும்.

எல்லாத் திருக்கோயிலிலும் இறைவனுக்கு இடது புறமாக இறைவி இருக்க இங்கு மட்டும் வலப் புறத்தே இருக்கும் காட்சியைக் காணலாம். மண மேடையில் இருப்பது போலக் கிழக்கு நோக்கியவாறு இருக்கின்றனர். எல்லா வகையிலும் அன்னைக்கே முதலிடம் வழங்கப்படுகிறது.

கரிக்குருவிக்கும், பன்றிக்குட்டிகளுக்கும், அருள்பாலிதத அம்மையும் அப்பனும் அருள் சுரக்கக் காட்சித் தருகின்றனர்.

அம்மன் சன்னதி வழியாகக் கோயிலுக்குள் நுழைந்து அம்மனை வழிபட்ட பிறகே சொக்கரை வணங்கி மீண்டும் அம்மன் சன்னதி வழியாகவே வீட்டிற்குத் திரும்புகின்றனர்.

**பெயர் சிறப்பு** :—அன்னை கயல்போன்ற கண்களைப் பெற்றிருப்பதால் அம் கயல் கண்ணி என்றும், மீன் கொடிக்கு உரியவள் ஆதலால் மீனாட்சி என்றும் போற்றி வணங்குகின்றனர்.


மீன் தன் முட்டைகளைப் பார்வையாலே தன் வயப்படுத்திக் குஞ்சு பொரிப்பது போலத் தன்னை வழிபடும் அடியார்களின் துன்பங்களையும் ஊழ் வினைகளையும் தன் மீன் போன்ற கண்களின் அருட்பார்வையால் அகற்றி அவர்கட்கு அருள் பாலிக்கிறாள். ஆகையால் தான் பாரதி, ''அமபிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்'' எனப் பாடுகின்றனர்.

அங்கயற்கண்ணி, அபிடேகவல்லி,, தடாதகை பிராட்டி, மாணிக்க வல்லி, தமிழறியும பெருமாட்டி என்ற பல பெயர்களும் அன்னை மீனாட்சியை அலங்கரிக்கின்றன.

கொண்டையில் முத்துக் கொண்டை என்ற அணிகலனும், தலையில் மணிமுடியும் மூக்கில் மாணிக்க மூக்குத்தியும், காதுகளில் சூரிய சந்திரத் தோடுகளும், நெற்றியில் மங்கள குங்குமமும் அணிந்து, எறிதரங்கம் உடுக்கும் புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமாக நரை பழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ்சுவையாகத் திகழ்கின்றாள்.

புன்முறுவல் பூததலர்த்த பூங்குமுதப் பவளச் செவ்வாயும், முழுமதியை விஞ்சும் மோகன வடிவழகும், அருள்நோக்கும், வாழ்வின் அஞ்ஞான இருள்போக்கும்; மெய்ஞ்ஞானம் உண்டாக்கும் நன்னெறியில் நின்று நல்லொழுக்கத்தால் வாழ்வை வென்று வாழும் ஞானியரின் மும்முல அழுக்குகளை அகற்றி அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பரின் உளக்கோயில் ஏற்றும் ஞானச் சுடர் விளக்காகவும் காட்சி தருகின்றாள்.

மீனாட்சி அம்மை கிள்ளைக்கு மழலைப் பசுங்குதலையொழுகு கிளவி கற்பித்தனள்; மயிலுக்குக் கிளிரிளஞ் சாயலை அளித்தனள்; மானுக்கு-நவ்விக்கு நோக்கைத் தந்தனள்; அரசு அன்னப் பறவைக்கு மட நடை பயிற்றுவித்தவள் என்பர் குமரகுருபரர். அதனால் தம் குழந்தைகட்கு எல்லா நலங்களை





யும் அருள இறைவியையும் இறைவனையும் வேண்டுவர்.

**மாலிக்காபூரின் மனமாற்றம்**

கி.பி. 1310-ஆம் ஆண்டில் அவுரங்கசீப்பின் தளபதியாக மாலிக்காபூர் மதுரையை முற்றுகையிட்டான். அப்போது பாண்டிய நாட்டையாண்ட வீரபாண்டியன் வலுவிழந்திருந்தமையால் எளிதில் வெற்றி பெற்றான். கோட்டையையும் கைப்பற்றிக் கோயிலைச் சூறையாடியும் இடித்துத் தரை மட்டமாக்கவும் முற்பட்டான்.

இவனுடைய படை வீரர்களில் ஒருவன் திருவேகம்பராயன். இவன் கோயிலைச் சுற்றிப் பார்த்து வந்தான். சுவாமியின் கோயில் கருவறையைச் சுற்றி எட்டு கல் யானைகளைக் கண்டான். அங்கிருந்த துறவியிடம் இதனைப் பற்றிக் கேட்டான். அத்துறவி யானைகள் விமானத்தைத் தாங்கும் புராணத்தையும், சிவபெருமான் சித்தராக வந்து கல்யானைக்குக் கரும்பு வழங்கிய திருவிளையாடலையும் கூறினார். ''அன்றுதின்றது மட்டுமல்ல இன்றும் தின்னும்'' எனத் துறவி கூறினார்.

கேட்டு வியப்புற்ற திருவேகம்பராயன் மாலிக்காபூரையும் அவ்வற்புதம் காணஅழைத்துவந்தான். துறவி கரும்பை மாலிக்காபூரிடம் கொடுத்து யானையிடம் நீட்டச் செய்தார். யாவரும் வியக்கும் வண்ணம் கல்யானை தன் நீண்ட துதிக்கையை நீட்டிக் கரும்பை வாங்கித் தின்றது. வியப்புற்ற மாலிக்காபூர் 'உண்மையில் ஆண்டவன் இங்கே தான் இருக்கிறான்' என்று கூறி, கோயிலை இடிக்காதிருக்க ஆணையிட்டான். துறவி யாரென்று அறிய முற்பட்டபோது துறவி காணப்படவில்லை. சொக்கலிங்கமே வந்து இந்த அற்புதத்தை நிகழ்த்தினார்.

**அன்னையின் அருள்**

மகமதியரின் ஆதிக்கத்தில்மதுரைமக்கள் பெரும் இன்னலுற்றனர். ஆலயத்தின் நிலையோ அவலத்தில் தடுமாறியது. இந்நிலையை மாற்ற அன்னை அங்கயற்கண்ணி விஜயநகர மன்னன் குமார கம்பண்ணன் கனவில் தோன்றி, இவனுக்கு விசுவகர்மா கொடுத்த வாளை குமாரகம்பண்ணனின் கரத்தில் வைத்து மகமதியரை வென்று மக்களைக் காப்பாயாக என்று கூறி மறைந்தாள். அன்னையின் ஆணைக்கேற்ப ஆலவாய் நோக்கிப் படையெடுத்து வந்தார் குமாரகம்பண்ணன்.

முகமதியர்கட்கு அஞ்சி கோயில் ஸ்தானிகர்கள் சொக்கேசப்பெருமாளைக் காப்பதற்காகத் திருமேனியை மூடி அதன்மேல் மணலைப் பரப்பிக் கல்லினால் சுவர் எழுப்பிக் கருவறையை அடைந்தனர்.

கருவறையில் இருந்த அம்மனின் சிலையைப் பெயர்த்து விமானத்தில் மறைத்தனர்.

கம்பண்ணர் மகமதியர்களை எதிர்த்து வெஞ்சமர் புரிந்து வெற்றிவாகை சூடி மதுரையை மீட்டபோது, ஆலயக் காவலர்களை அழைத்துக் கோயில் வாயில்களைத் திறக்கச் செய்தார். மணல் மேடுகளை அகற்றினார். பல வியப்புகளை கண்டனர்.

48 ஆண்டுகட்கு முன் அடைக்கப்பட்ட கருவறைக்குள் லிங்கத்தின் திருமேனிக்குச் சாத்தப்பட்ட சந்தனமும் சண்பக மலர்மாலையும் அன்று விடியலில் சாத்தியது போலவே புதுப்பொலிவுடன் காட்சி தந்தன. வெள்ளி குத்து விளக்கு இரண்டும் சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்தன.

**அங்கயற் கண்ணியின் அருட்கொடை**

திருமலை மன்னருடைய ஆட்சி காலத்தில், ஐந்து வயது வரையில் ஊமையாய் இருந்து செந்தில் முருகன் திருவருளால் பேசும் ஆற்றல் பெற்று கந்தர் கலிவெண்பா பாடிய கவிவாணர் காசிக்குச் செல்ல மதுரைக்கு வந்தார்.

கந்தனைப் பாடிய சுந்தர திருவாயால் செந்தமிழ் அன்னை மீனாட்சி மீதுபிள்ளைத் தமிழ் பாட வேண்டினார். ஆறுகால் மண்டபத்தே அமர்ந்து திருமலை நாயக்கர் முன்னிலையில் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழையரங்கேற்றினார்.

தேனினுமினிய தெள்ளுதமிழில் வருகை பருவத்து ஒன்பதாவது பாடல் ''தொடுக்கும் கடவுட் பழம்பாடல்'' என்ற பாடலை உளமுருகப் பாடினார். பாடலைக் கேட்ட அன்னை பெண் குழந்தை வடிவில் தோன்றி, மன்னர் கழுத்திலிருந்த முத்துமாலையைக் கழற்றிக் கவிஞரின் கழுத்தில் அணிவித்து மறைந்தது. அனைவரும் அங்கயற்கண்ணியின அருளை வியந்துபோற்றினர்.

—(அடுத்த இதழில் நிறைவுபெறும்)



# கம்பரின் இராமாவதாரம்




டாக்டர் த. அமிர்தலிங்கம் **[19]**

ஆண்டாண்டுக் காலங்கள் அழுது புரண்டாலும் மாண்டார் மீள்வதில்லை என்பது அனைவருக்கும் தெரிந்திருக்கும் ஒரு பழமொழிதான். ஆனாலும் பாசத்திற்குரியவர்கள் மறைய நேரிடும் போது வெள்ளமெனப் பொங்கும் கண்ணீரைத் தடுக்க முடிகிறதா என்றால் முடிவதில்லை. தசரதரின் மூச்சடங்கக் காணும் கோசலை வெயிலில் அகப் பட்ட என்பில்லாப் புழுவைப்போல் சோகத்தால் துடிக்கிறாள். அரிய இரத்தினத்தை இழந்த நாகம் போலவும், ஆண் அன்றிலை இழந்த பெண் அன்றிலைப் போலவும், நீர்வற்றிப் போகத்துடிக்கும் மீன் போலவும் உடலும் உள்ளமும் நடுங்கத் துடிக்கிறாள். தன்பிரிய மகனான இராமனையும் குறைகூறி தந்தையைக் கொன்றாயே என்று கூறிப் புலம்புகிறாள் என்றால் அத்தாய் கொண்ட சோகத்தை என்னென்பது?

நற்புத்திரரைப் பெற்ற பெற்றோர் 'புத்' எனும் நரகம் எய்தாது நல்லுலகம் சேர்வார்கள். இம்மையில் பெற்றோர்களைக் குறைவின்றிக் காப் பதும், மறுமையில் அவர்களை வீட்டுலகில் சேர்ப் பதுமே சிறந்த புதல்வர்க்குரிய கடமை. ஆனால் இராமனோ நானிருக்க பயமென் என்று தந்தை யைக் காக்க வேண்டியவன் இப்படி கொன்று விட் டானேஎன்று புலம்பியும் நடுங்குகின்றாள்கோசலை. நண்டும், சிப்பியும், தாம் கொண்ட சூல் முற்றிக் கருஉயிர்த்தபின் அவை மாண்டொழியும், வாழை குலை ஈன்றபின் வளர்ச்சியின்றி அழியும். மூங்கில் பூத்துக் காய்த்தபின் வாழைபோல் வளர்ச்சியின்றி அழியும். நண்டு, சிப்பி, வேய், கதலி இவைதான் தம் வாரிசுகளால் நாசமுறும் என்றால் சக்கரவர்த்தி தசரதரும் தம் மக்களால் மாள நேரிட்டு விட்டதே என்று இராமருடன் பரதனையும் கூடக் கடிந்து துயருகிறாள் கோசலை. ''வடிதாழ் கூந்தல் கேகயன் மாதே!'' என்று கைகேயியை விளித்து, நீ உன் கூந்தலை விரித்து அழுது அடம் சாதித்து கோரிய வரம் பெற்று இப்போது தசரதரின் கதையையே முடித்துவிட்டாய் அல்லவா! இப் போது உனக்குச் சந்தோசம் தானே'' என்ப தாகக் கைகேயியையும் நொந்து கொண்டவளாக உயிரற்ற தசரதரின் மார்பில் புரண்டு கதறு கிறாள் கோசலை.

இவ்வாறு தசரதரின் உடலைக் கட்டிக் கொண்டு கோசலை அழ, அவளுடன் சுமத்திரை யும் அழ, தசரதரின் அறுபதினாயிரம் மனைவிய ரும்கூட திரண்டு வந்து மாண்ட மன்னன் பூத உடலைக் கண்டு சோகம் தாளாமல் கதறி அழு கிறார்கள். காட்டு வெள்ளம் சூழுமானால் அக் காட்டின்கண் வாழ்ந்திருக்கும் மயில்கள் எல்லாம் மலையைத் தஞ்சம் அடைந்து அங்கே நெருங்கி சூழ்ந்திருக்கும். தசரதனின் மலைபோன்ற மேனி யைச்சூழ்ந்து கொண்டவராய் அவர்தம் மயிலனைய அறுபதினாயிரம் மனைவியரும் நெருங்கிச் சூழ்நது கண்ணீர் வடிக்கின்றனர். அவனுடல் எரியும் போதே தம்மையும் சேர்த்து எரித்துக் கொள்ளும் தலை சிறந்த கற்புறுதியோடு காட்சியளித்தனர் தசரதரின் தேவியர் என்று வர்ணிக்கிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பர்.

இவ்வாறு கோசலை, சுமத்திரை மற்றுமுள்ள தசரதரின் அறுபதினாயிரம் தேவியரும் தம்முயிர்த் துணையாகிய தசரதர் மாண்டதால் அழுது அழுது கண்ணீர் வெள்ளத்தைக் கடலாகப்பெருக்கி மேலும் அழச் சக்தியின்றி மயக்கமுற்று விழும் சோகத்தைப் பல பாடல்களில் வர்ணித்திருக்கும் கம்பர், உண்மையில் தசரதரின் மரணத்திற்குக் காரணமான கைகேயி, தசரதரின் மேனியில் புரண்டு அழுதாளா? சோகம் தாளாமல் துடித் தாளா? ஒரு சொட்டுக் கண்ணீரேனும் அவள் வடித் தாளா என்பதையெல்லாம் ஒரு பாடலிலும் சுட்ட வில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. தசரதர் துடிக்க துடிக்க இராமர் காட்டிற்குச் சென்றே ஆகவேண்டும் என்று கட்டாயப்படுத்தி காரியத்தைச் சாதித்துக் கொண்டவளான கைகேயி, தசரதர் உயிர் பறந்துவிட்ட இந்நிலை யிலும் பரதன் மகுடம் சூடவேண்டும் என்ற தன் விருப்பம் விரைந்து நிறைவேறினால் போதும் என்ற பொறியும் நெறியும் மயங்கிய வெறி உணர் விலேயே இருப்பாள் என்பது யாவரும் எளிதில் ஊகித்து விடக்கூடிய உண்மையேயாகும். ஆகவே தான் கைகேயியின் இப்போதைய நிலை என்ன என்பதை நமக்குக் காட்டாமலே உணர்த்திக் காவியக் கதையை நகர்த்திச் செல்கிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பர்.





சக்கரவர்த்தி தசரதர் மாண்டுவிட்ட நிலையில், அவர் ஈன்ற மக்கள் நால்வரில் இருவர் வனமும், மற்ற இருவர் தாய்மாமன் இல்லமும் சென்றிருக்க, தசரதர் உடலை என்ன செய்வது என்று சிந்திக்கிறார் குலகுருவான வசிட்டர். மண்ணாசைமிக்க கொடியவளாம் கைகேயியின் மகன் திரும்பும்வரை தசரதர் உடலைத் தைலத்தில் இட்டுக் கெடாது காக்க அவர் உத்தரவும் இடுகிறார்.

''செய்யக் கடவ செயற்குரிய
    சிறுவர் ஈண்டை யாரல்லர்
எய்தக் கடவ பொருள்எய்தாது
    இகவா வென்ன இயல்பெண்ணி
மையற் கொடியாள் மகனீண்டு
    வந்தால் முடித்து மற்றென்னத்
தையற் கடலிற் கிடந்தானைத்
    தயிலக் கடலின் தலையுய்த்தான்.''

தசரதரின் தேவிமார் அறுபதினாயிரவரும் இப்போதே தீப்பாய்ந்து உயிர்விடத் துணிகிறார்கள். வசிட்டர் அவர்களை ''சக்கரவர்த்தியின் ஈமச்சடங்கு நிகழும் நாளில் உங்கள்கருத்தை முற்றுவிக்கலாம்'' எனச் சமாதானம் கூறி அந்தபுரத்திற்கு அனுப்பி வைக்கிறார். கோசலை, சுமத்திரை ஆகிய இருவரையும் அவரவர் மாளிகைக்கு அனுப்பி வைக்கிறார். இராமர் வனம் சென்றதும், தசரதர் இறந்ததுமாகிய செய்திகள் எவற்றையும் கூறாமல் பரத சத்ருக்கனரை அழைத்துவரக் கேகய நாட்டிற்குத் தூதுவரையும் அனுப்புகிறார் வசிட்டர். சக்கரவர்த்தியின் ஆணையாகவே ஓலையை எழுதித் தூதுவரிடம் கொடுத்து பரதசத்ருக்கனரை விரைந்து அயோத்திக்கு அழைத்துவர உத்தரவிட்டு அனுப்புகிறார் வசிட்டர். சூரியோதயத்திற்கு முன்பாகவே இவ்வளவு பணிகளும் வசிட்டரால் விரைந்து செய்து முடிக்கப்பட்டுவிடுகின்றன... ''தசரதர் சுவர்க்கம் எய்தினார். ஆட்சிக்குரிய மக்களும் அயோத்தியில் இல்லை. ஆகவே நானே அயோத்தியை இனி ஆட்சி செய்வேன்'' என்று கூறுவது போல ''சுடர்த் தேரேறித் தோன்றினான் ...விரிகதிரோன்''. என்று சூரியோதயத்தை வருணிக்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

...அயோத்தியில் இவ்வளவு நிகழ்ச்சிகளும்நடைபெற்றுக்கொண்டிருக்கும் இதே நேரத்தில், இராமருடனே காட்டிற்குச் செல்லும் துணிவுடன் சென்று சோலையில் உறங்கிய மக்கள் கண்வ்ழித்தெழுந்து இராமரை அச்சோலையில் காணாமல் பதறுகிறார்கள். ''ஆருயிர் நாயகன் எங்கே? அவர் அருந்துணை சீதை எங்கே? இலக்குவன் எங்கே?'' என்று எட்டுத் திசைகளிலும் ஓடித தேடுகிறார்கள் அவர்கள். ''அயர்ச்சியால் கண் உறங்கி இந்த மோசத்திறகு ஆளானோம்மே! இராமர் புறப்பட்டுச் சென்ற தண்டகாரண்ய வனத்திற்குநாமும் தொடர்ந்து செல்வோம்'' என்ற துணிவோடு மக்கள் புறப்படுகிறார்கள். அப்போது தேர் சென்ற சுவடு அயோத்தியை நோக்கியதாக இருக்கவே கொடிய வ்டம் தலைக்கேறி உயிர் போக இருந்தநிலையில் தேவாமிர்தம் கிடைத்தால் எப்படி மகிழ்வுண்டாகுமோ அப்படி போன உயிர் திரும்பக் கிடைத்தது போன்ற பெரு மகிழ்ச்சிக்கும் ஆளாகி ''இராமர் அயோத்தி திரும்பிவிட்டார். நாம் உய்ந்தோம் உய்ந்தோம்'' என்று பேராரவாரம் செய்தவர்களாய் அயோத்தியை நோக்கி மிக ஆர்வமாக நடக்கிறார்கள்.

தேர்த்தடம் சிறிதும் மாற்றம் இன்றிஅயோத்திக்கே செல்வதைக் காணும் அம்மக்கள் கொள்ளும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அயோத்தியை அம்மக்கள் மீண்டும் சென்று அடையும்போது அவர்கள் கொள்ளும் ஏமாற்றமும, சோகமும் என்னென்பது? இராமர் அயோத்தி திரும்பவில்லை. சக்கரவர்த்தியும் ஆவ் நீத்தார் என்பதைக் கேட்டு

மனம் உடைந்து மூர்ச்சையாகிப் போகிறாகள் அவர்கள். இராமருடன் வனம் சென்றிருந்தால் மைந்தனுக்குத் துணை புரிந்த மகிழ்ச்சியைப் பெற்றிருப்போம். இல்லை அயோத்தியில் இருந்திருந்தால் தசரதருக்குத் துணையாக இருந்த ஆறுதலையாவது அடைந்திருப்போம். ஆனால் இப்படி இருபுறமும் ஏமாற்றத்திற்கு ஆளானோமே! இனி இவ்வுயிரைத் தாங்கி வாழமாட்டோம் என அம்மக்கள் அனைவரும் தற்கொலைக்கு முற்படுகிறார்கள். அப்பொழுது வசிட்ட முனிவர் அவர்களுக்கு ஆறுதல் கூறுகிறார். ''நானும் உங்களைப் போலவே துக்கத்தால் உயிர்விட நினைத்தேன். தற்கொலை செய்து கொள்வதால் பெரும் பாவமும் பழியுமே வந்து சேரும். விதியின் படியே எதுவும் நடக்கும். ஆகவே நீங்களோ நானே உயிர் விட்டு ஒரு லாபமும் இல்லை' என்று நீதியை எடுத்துக் கூறி மக்கள் கொண்ட மனப் பதைப்பை மாற்றுகிறார் வசிட்டர். மக்களும் வசிட்டர் அறிவுரையால் ஓரளவு ஆறுதல்அடைந்து அவரவர் இல்லம் திரும்புகிறார்கள்.

இரவோடு இரவாக வனம் புறப்பட்ட இராமர் சீதை இலக்குவன ஆகிய மூவரும் இதே நேரம் கங்கையின் வடகரையைச் சென்று சேர்வதையும் எடுத்துக் காட்டுகிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். மெல்ல உதயமாகும் கதிரவன் ஒளியில் தெள்ளத் தெளிவாகத் தெரியும் இராமரின் மேனியழகைக் கம்பர் வர்ணக்கும் பாடல் ஒனறு மிக அற்புதமான பாடலா ; இங்கே திகழ்கிறது. கதிரவன் ஒளியில் ஏனைய ஒளிகள் மறைந்து விடுவதுஇயல்பு. ஆனால் இந்த இயற்கைக்கு மாறாக அவதார மூர்த்தியாகிய இராமரின் உடலிலிருந்து வீசுகின்ற ஒளியில் கதிரவன் ஒளி மறைந்து போகின்றது. அஞ்சனமை போல விளங்குவதால் இராமரின் திருமேனியை 'மை' என்று வர்ணிப்பதா? அஞ்சன மைக்கு ஒளி ஏது? ஒளி வீசும் இராமர் திருமேனியை 'மரகதம்' என்று உவமிப்பதே பொருந்தும்! ஆ! மரகதத்திற்கு ஏது இராமர் மேனிபோல் குளிர்ச்சி? குளிர்ந்து திகழும் இராமர் மேனியை மறிகடல் என்பதே பொருந்தும்? உப்புக் கரிக்கும் கடலுடனா இராமர் திருமேனியை வர்ணிப்பது? தப்பு தப்பு! ஆம்! இனிக்கின்ற நீரைப் பொழியும் மழைமுகில்தான இராமர் திருமேனிக்குப் பொருத்தமான உவமை! அடடா! மழை மேகமும் மழை பொழிந்த பின்னால் வெளுத்துப் போகுமே! இராமர் திருமேனி அபபடி வெளுக்கும் தன்மை வாய்ந்ததன்று. உவமிக்கவொண்ணாத பேரெழில் வண்ணர் இராமர்! ஐயோ எதைக் கூறி நான் அவர் திருமேனி எழிலை உவமிப்பேன் என்று கவிச் சக்கரவர்த்தி கம்பரே திகைப்பதாகத் திகழும் அவ்வொப்பற்ற பாடல் பின்வருமாறு:

''வெய்யோன் ஒளி தன்மேனியின் விரிசோதியின்
மறைய
பொய்யோ எனும் இடையாளொடும்
இளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோ மழைமுகிலோ

ஐயோ இவன் வடிவென்பதோர் அழியா
அழகுடையான்''

ஒப்பற்ற மாறாத அழகுடைய இராமபிரான், உண்டோ இல்லையோ என்று ஐயுறத்தக்க நுண்ணிய இடையுடைய பிராட்டியோடும் தம்பி இலக்குவனோடும் நடந்துபோன எழிலை சந்த நயமும் உவமை நயமும் உணர்ச்சி நயமும் இழைய மிக அற்புதமாக வர்ணித்திருக்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

கங்கைக் கரையை அவர்கள் நெருங்கிக் கொண்டிருந்தபடியால் வயல்களும், சோலைகளுமான மருதநிலக் காட்சிகளை அவர்கள் கண்டு களித்தவாறு செல்கிறார்கள். ஆண் அன்னங்களும் பெண் அன்னங்களும் கூடி விளையாடும் காட்சி, தாமரை மலர்களின் தேனைக் குடித்து வண்டுகள் ரீங்காரம் செய்யும் காட்சி, கரும்பில் சாறு பிழியும் கரும்பாலை எந்திரங்கள் எங்கும் நிறைந்திருக்கும் காட்சி முதலானவற்றைக் கண்டு களித்தவாறு நந்தவனங்களின் வழியாக நடந்து போகிற அம்மூவரும், பெரிய எருமைகள் பல நெற்கதிர்களை மேய்ந்து நீரில் போய் விழ, நீர்ப்பூக்களில் தேனருந்தும் வண்டுகளும். மற்றவ் வயல் மீன்களும் துள்ளி குதிக்கும் காட்சியைக் கண்டுகளித்தவாறு கங்கைக் கரையின் வடகரையைச் சென்று சேர்கிறார்கள. அக்கரையில் ஆசிரமம் அமைத்து கொண்டு தவமியற்றிக் கொண்டிருக்கும முனிவர்கள் அமுத சொரூபியாகிய இராமரை இதுகாறும் ஞானக்கண்ணால் கண்டு மகிழ்ந்தவர்கள் இப்பொழுது தங்கள் தங்கள் ஊனக் கண்களாலும் கண்டு, விளம்புதற்கு அரியதான களிபேருவகையை அடைகிறார்கள்.

''எதிர்கொண் டேத்தினர் இன்னிசை பாடினர்
வெதிர்கொள் கோலினர் ஆடினர் வீரனைக்
கதிர்கொள் தாமரைக் கண்ணனைக் கண்ணினார
மதுர வாரி யமுதென மாந்துவார்''

''மொழியுங் கண்ணீர்ப் புதுப்புனல் சூட்டினர்
மொழியும் இன்சொல்இன் மொய்ம்மலர் சூட்டினர்
அழிவ்ல் அன்பெனும் ஆரமிர் தூட்டினர்
வழியில் வந்த வருத்தத்தை வீட்டினர்''

காணாமல் போய் நீண்ட வருடங்களுக்குப் பிறகு தம் குழந்தைகள் கிடைக்கப் பெற்றால் எப்படி பெற்றோர் ஆனந்தம் கொள்வார்களோ அப்படியே இராமரைக் காணப் பெற்ற முனிவர்களும் சொல்லொணாப் பேரானந்தம் அடைகிறார்கள். காய், கனி, கிழங்குகளை மிக நல்லனவாகத் தேடிக் கொண்டு வருகிறார்கள். கங்கையில் நீராடி, தீயோம்பி, அமுது செய்தருள வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறார்கள். அத்தபோதனர்களின் பக்திப் புனலில் ஆடி அன்பு அமிர்தத்தை உண்ட இராமரும் கங்கைப் புனல் சீதையுடன் நீராடுகிறார்; மங்கையர்க்கு விளக்கு போன்ற சீதையின் சிவந்த கைகளைப் பற்றியவாறு கங்கையில் நீராடுகிறார்.

''மங்கையர்க்கு விளக்கன்ன மாதையும்
செங்கை பற்றினன் தேவரும் கைதொழப
பங்கயத்து அயன பண்டுதன் பாதத்தின்
அங்கையிற் தந்த சங்கையின் ஆடினான்.''

திருமால் திரிவிக்கிரமராகி மூவுலகம் அளந்தார், அப்பொழுது விண்ணுலகிற்குச் சென்ற திருவடியைப் பிரம்மா தம் கைக் கமண்டலத்தால் திருமஞ்சனம் ஆட்டுவித்தார். பிரம்மாவின் கமண்டல நீரே திரிவிக்கிரமரின் திருவடியைத் திருமஞ்சனம் ஆட்டுவித்தபோது கங்கையாறாகப் பெருக்கெடுத்தது. முன் அவதாரத்தில் தம்பாதம் வழியாக கங்கையைப் பெருகியோடச் செய்த திருமாலே இப்பொழுது இராமாவதாரத்தில் தம் திருமேனி முழுவதும் மூழ்கத் தம் பிரிய திருமகளின் கைத்தலம் பற்றி நீராடுகிறார் என்று இப்பாடலில் திருமாலின் திரிவிக்கிரமாவதாரச் சிறப்பையும் இணைத்துக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் போற்றிப் பாடியிருக்கக் காண்கிறோம்.

இவ்வாறு திருமாலாகிய இராமரும், திருமகளாகிய சீதையும் இணைந்து நீராடப் பேருவகை கொள்ளும் கங்காதேவி அவர்களை வணங்கிக் கைதொழுது கூறுகிறாள். "உலகத்திலுள்ளவர் எல்லாம் என்னிடத்து மூழ்கி தங்கள் தங்கள் அளவற்ற பாவங்களைப் போக்கிக் கொள்வார்கள். இன்றைக்கு என்னைத் தோற்றுவித்த பரம்பொருளே! நீங்கள் மூழ்கியதால் நான் என்னிடம் சேர்த்துக் கொண்ட அளவற்ற பாவங்களை நீங்கிக் கடைத்தேறுனேன்."

"கன்னி நீக்கருங் கங்கையும் கைதொழாப்
பன்னி நீக்கரும் பாதகம் பாருளோர்
என்னின் நீங்குவர் யானுமின்று என்தந்த
உன்னின் நீக்கினென் உய்ந்தனனாள் என்றாள்"

கங்கையின் கூற்றாகக் கங்கை புனிதமடைந்ததைக் கூறி மகிழ்ந்த கவிச்சக்கரவர்த்தி கம்பர், தம் கூற்றாகவும் கங்கை கொண்ட புண்ணியத்தைப் பாடிப் போற்றுகிறார். திருமாலின் செய்ய தாமரைத் திருவடிகளைப் பண்டு தீண்டி, உயிர்களின் கொடிய பாவங்களைப் போக்கும் சிறப்புடன் விளங்கும் கங்கை, இப்போது எமபெருமானுடைய திருமேனி முழுதும் தன்னுள் மூழ்கப் பெற்றாள். ஆகவே உலக உயிர்கள் இனி நரகிடை உழலா உயர் பேற்றினைப் பெற்றன என்று கூறிக் கம்பர்

"செய்ய தாமரை தாள்பண்டு தீண்டலால்
வெய்ய பாதகம் தீர்ந்து விளங்குவாள்
ஐயன் மேனிஎல்லாம் அளைந்தாள் இனி
வையம் மாநரகத்திடை வைகுமோ?"

என்று வினவும் முறையில் கங்கை மேலும் புனிதம் உற்றதன்மையைப் போற்றிப் பாடுகிறார்.

கங்கை நறும்புனல் ஆடி வேதம்வல்ல முனிவர் இருக்கையை அடைகிறார்கள் இராமரும்சீதையும். பிறகு தீ வளர்த்து உரிய கடன்களை முறைப்படி ஆற்றி அம்முனிவர்கள் அமுதாகப் படைத்த கீரையுணவையும் உண்டு மகிழ்ச்சியுடன் விளங்குகிறார்கள். பாற்கடலைக் கடைந்து அமிர்தத்தைத் தோற்றுவித்து அதையும் நீங்களே உண்ணுங்கள் என்று தேவர்களை உண்பித்த பெருமான், இன்று முனிவரர்கள் அன்போடு அளிக்கும் எளிய கீரை உணவை உயர்வாக உகந்து அமுது செய்தார்.

"வருந்தித தான்தர வந்த அமுதையும்
அருந்து நீரென்று அமரரை ஊட்டினான்
விருந்து மெல்லடகு உண்டு விளங்கினான்
திருந்தினார் வயற் செய்தன தேயுமோ ?"

மேலோர்கள் எளியதையும் எளியவரையும்கூட ஏற்றமாகக் கொண்டு ஏற்றருள் புரிவர் என்பது இப்பாடலின் பொருளாகும்.

"தேவா நின்கழல் சேவிக்க வந்தனன்
நாவாய் வேட்டுவன் நாய அடியேன்"

என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு இராமரைத் தரிசிக்க வந்த எளிய வேடுவனான குகனிடமும், எத்தகைய அன்பு பாராட்டித் தண்ணளி புரிந்து ஆட்கொண்டார் இராமர் என்பதை வரும் இதழில் விரிவாகக் கண்டு மகிழ்ந்திடுவோமாக.

(தொடரும்)

# நூல் மதிப்புரை

நூல் பெயர்: **ஸ்ரீஇராமபிரானுக்கு துளசிதாசரின் விண்ணப்பம்**
நூலாசிரியர்: எஸ். பி. ராஜகுமாரி பிஏ.பி.எல்.
வெளியீடு: ரங்கநாயகி பதிப்பகம்,
41[1 முத்துகிராமணி தெரு
மயிலாப்பூர், சென்னை-4.
பக்கம் : 311 விலை: ரூ.32

கலியுகத்தில் தாம்படும் துன்பங்களைத் துளசிதாசர் அனுமாரிடம் கூறி அதைத் தீர்க்கும்படி வேண்டினார். "உன் கஷ்டத்தை ஒரு விண்ணப்பமாக எழுதித் தந்தால் அதை இராமரிடம் சேர்ப்பித்து விடுகிறேன்" என்றார் அனுமார். துளசிதாசரும் "விநயபத்ரிகா" என்ற நூலை இந்தி மொழியில் எழுதி அனுமாரிடம் வழங்க அவர் அதை இராமரிடம் சேர்ப்பித்தார். ஸ்ரீராமர் துளசிதாசரின் விண்ணப்பத்தை ஏற்று அவரை இரட்சித்து அருளினார்.

இந்தியில துளசிதாசர் எழுதிய நூலைத் தமிழில் பக்தி நயம் சொட்டச் சொட்ட மிகத் திறம்பட மொழி பெயர்த்து வழங்கியிருக்கும் நூலாசிரியர், தமிழன்பர்களின் போற்றுதலுக்கு உரியவரே.

"விதுரர் ஸ்ரீ கிருஷ்ணரின் சிறந்த பக்தர். இதனால் ஸ்ரீகிருஷ்ணர் அஸ்தினாபுரம் சென்றபோது முதலில் துரியோதனன் வீட்டிற்குச் செல்லாமல் விதுரர் வீட்டிற்குச் சென்றார். விதுரரின் மனைவி வாழைப் பழத்தை உரித்து கிருஷ்ணருக்கு அளிக்க முற்பட்டபோது பகவானின் அன்பில் மயங்கியவளாய்ப் பழத்தைக் கீழே போட்டுப் பழத்தோலை மட்டும் கொடுத்துக் கொண்டிருந்தாள். அன்புப் பசி கொண்ட பகவானும் அத்தோலையே சாபபிட ஆரம்பித்தார். விதுரர் இதைக் கவனித்து மனைவியை விலக்கித் தாமே பழத்தைக் கொடுக்க ஆரம்பித்தார். அதை உண்ட கிருஷ்ணர் தோலில் இருந்த சுவை பழத்தில் இல்லை என்று கூறி அதைச் சாப்பிட மறுத்தார்."

இது போன்ற விளக்கக் கதைகள் பலவற்றையும் நூலாசிரியர் ஆங்காங்கே எடுத்துக் காட்டி இந்நூலின் சுவையை மிகுதியாக்கி இருக்கிறார்.

அனைவரும் கற்றுப் பயன் கொள்ள வேண்டிய நூல்.


நூல் பெயர்: **தமிழ்ப் புகழ் வெண்பாமாலை**
நூலாசிரியர்: டாக்டர் பழநி இளங்கம்பன்
வெளியீடு: சித்ரகூடம், பழநி.
விலை : ரூ. 2.00

"தாய்மடியில் தவழ்ந்திருந்த
காலம் தொட்டுத்
தரைமடிக்குநான் போகும்
மட்டும் என்றன்
வாய்மொழியாய் வாழ்வுதரும்
தமிழே! உன்னை
வாழ்த்தாத நாளெல்லாம்
வாழா நாளே."


"தமிழ்ப் பற்றே இல்லாதவர்கூட இந்த நூலைப் படித்தால் உடன் தமிழ்மீது தணியாக் காதல் கொள்வர்" என்று அணிந்துரையில் குறிப்பிடுகிறார் டாக்டர் தவத்திரு குன்றக்குடி அடிகளார். அன்பர்கள் இந்நூலைக் கற்றுப் பயன் கொள்வார்களாக.

—நிறைமதி

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.




கடலூர் வட்டம் சிங்கிரிகுடி அருள்மிகு லட்சுமி நரசிம்மசாமி ஆலய மகாசம்ப்ரோட்சண வைபவம் 1.2.90 அன்று மிகச் சிறப்புற நிகழ்ந்தது. அறநிலையத் துறையின் அரசுச் செயலாளர் திருமிகு ஆர். சண்முக சிகாமணி ஐ.ஏ.எஸ்., ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ்., இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர். திருப்பணிக் கமிட்டித் தலைவர் திரு எஸ்.கே. சௌந்தரராஜன் பி.ஏ.பி.எல். உடன் உள்ளார்.



பதிவு எண். எம் 7039










இராயப்பேட்டை அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் மற்றும் சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான அடுக்குமாடி வர்த்தக அங்காடி கால்கோள்விழா 2.4.90 அன்று நடைபெற்றது. அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.பி.கந்தசாமி எம்.ஏ. அவர்கள் கால்கோள் விழாவில் கலந்துகொண்டு பணிகளை ஆரம்பித்து வைத்தார். ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமை தாங்கிய இவ் விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமிகு இரா. அன்பரசு, ஆயிரம் விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு மு.க. ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.